விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 17 புதன்கிழமை (30.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லன்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அவுஸ். குழுவினரை சந்திக்க அஞ்சிய முல்லைத்தீவு மக்கள்

## அச்சுறுத்தல் காரணமா?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக்குச் சென்ற அவுஸ்திரேலியக் குழுவினரைச் சந்திக்க அப்பகுதி மக்கள் அச்சம் கொண்டிருந்ததாக பிரதேசத் தகவல்கள் தெரிவித்தன. இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டதாலேயே அவர்கள் அவுஸ்திரேலியக் குழுவைச் சந்திக்க அஞ்சியதாகவும் எனினும் அவர்களை சந்தித்து தமது குறைகளை எடுத்துக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## 15 வயதுச் சிறுமி கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 15 வயதுச் சிறுமி இனந் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே குறித்த சிறுமியை நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் பகுதியில் வைத்தே குறித்த சிறுமி கடத்தப் (19ஆம் பக்கம் பார்க்க)

## பாறையில் மோதி படகு விபத்து

### இரு சிறுவர்கள் பலி

(ஜகார்த்தா)

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற இலங்கையைச் சேர்ந்த ஒரு குழுவினரின் படகு, இந்தோனேசியாவின் யாவா கடற்பகுதியில் உள்ள கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இப்படகு விபத்தில் 4 வயதுடைய சிறுவனும், 10 வயதுடைய சிறுமியொருவரும் பலியாகியுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை கறுப்பு ஜனவரி ஆர்ப்பாட்டப் பேரணியும் எதிர்ப்புக் கூட்டமும் நடத்தப்பட்டது.

லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெருந்திரளானோர் பேரணியாக பொது நூலக கேட்போர் கூடத்திற்குச் சென்று அங்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்கொள்வதற்கு அரசு தயார்!

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட விருக்கின்ற பிரேரணையை எதிர்கொள்வதற்கு தயாராகவும் நம்பிக்கையுடனும் இருப்பதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவிருக்கின்ற நேரடியான மற்றும் செயல்முறையிலான தீர்மானம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் (02ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தினுள் விழுந்த சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வயற்குளத்தில் மீன்பிடித்து விளையாடச் சென்ற சிறுவன் குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான். இப் பரிதாபகரமான சம்பவம் நேற்றுக்காலை 11.30 மணியளவில் கந்தரோடை இக்கிராணிப்பகுதியிலுள்ள குளமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகம் கந்தரோடையினைச் சேர்ந்த ரவிச்சந்திரன் றுக்ஷனன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார். பிரஸ்தாப சிறுவன் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை காப்பாற்ற இந்தியாவும் அமெ.யும் திட்டம்

(சென்னை)

போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற இந்தியா மற்றும் அமெரிக்கா சதித்திட்டத்தில் ஈடுபடுவதாக பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டியுள்ளார். இது குறித்து ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைப்போரில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டது, தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டது, உள்ளிட்ட செயல்களுக்காக இலங்கை மீது போர்க்குற்றவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும்சில வல்லரசுகளின் துணையுடன் இலங்கை அரசு போர்க்குற்ற விசாரணையிலிருந்து தப்பி வருகின்றது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

அதன்படி இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பாக (19ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை ஆணைக்குழுவுடன் ஐ.நா.சபை ஒத்துழைக்கும்!

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகளை உறுதி செய்வதற்கு தமது அமைப்பு உதவிகளை வழங்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், அதனை மேம்படுத்துவதுமே 2013-2017-ம் ஆண்டு வரையிலான முக்கிய இலக்காகும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி இலங்கைப் பணிப்பாளர் என்ரிக்கோ கவேக்லியா தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பு சில திட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கண்காணிப்பு, முறைப்பாடுகள், விசாரணைகள், விழிப்புணர்வு ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் (19ஆம் பக்கம் பார்க்க)


## இளம் குடும்பப் பெண் சடலமாக மீட்பு கொலை என்கின்றனர் பொலிஸார்!

### சந்தேகத்தில் கணவன் கைது

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பப்பெண்ணொருவரின் சடலம் 25 அடி ஆழமுள்ள கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இது கொலையாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக்காலை வேளை கோப்பாய் மத்தி சூசையப்பர் ஆலயப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தில் வசித்து வருபவரும் மாவிட்ட (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைக்கு எதிரான...

படுத்துவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த பரிந்துரைகள் மிகத் தெளிவாக அமுல்படுத்தப்படும்.

நாங்கள் ஜனாதிபதி செயலகத்துடன் மிக அண்மித்தே செயற்படுகின்றோம்.

ஜனாதிபதி செயலகமும் இதனை கண்காணித்துக்கொண்டு வருகின்றது. தீர்மானத்திற்கு அப்பால் சென்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதனை தெளிவாகக் கூறமுடியும்.

இலங்கை அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அது குறித்து சர்வதேசத்திற்கு போதியளவு விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவித்த அவர், மனித உரிமைப் பேரவையில் கொண்டு வரப்படவிருக்கின்ற விவகாரம் எந்தவிதமான பாதகங்களையும் ஏற்படுத்தாது என்றும் அவர் சொன்னார். (எ–1)

## பிள்ளையார் இன்

**25% கழிவு**

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

**பூரி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

**சப்பாத்தி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## கண்ணீர் அஞ்சலி




### கோபாலராசா உதயசீலன் (சீலன்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர் திருமதி உதயச்சந்திரிக்கா விக்கினேஸ்வரனின் அன்புச் சகோதரன் கோபாலராசா உதயசீலன் (சீலன்) 28.01.2013 அன்று அகால மரணமடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயரமடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், பணியாளர்கள், தியாகி அறக்கொடை நிறுவனம், பல்பொருள் விற்பனை நிலையம் (TCT-MTC)

(1610)



## நீங்கள் விரும்பிய இடங்களில்....

காணி-வீடுகளை வாங்கித் தருவதற்கும். விற்றுக் கொடுப்பதற்குமான நம்பிக்கையான ஒரே நிறுவனம்

Real Estate

### ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
### Rajaluxmy Enterprise

26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
தொ.பே: 0779994603. 0215684810
E-mail:nrluxmy@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும் **திருமதி மகிழினி மோகனராசன்** அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் சின்னத்தம்பி காசிநாதன்

அவர்கள் 29.01.2013 அன்று காலமானதையிட்டு மிகுந்த வேதனையடைவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், யா /உரும்பிராய் இந்துக் கல்லூரி

(சி-2279)

## உடனடி வேலைவாய்ப்பு

சவுதி அரேபியா கட்டார்

### COMPANY VACANCIES

| | | |
|---|---|---|
| Mason மேசன் | 1200-1400 | 44400-51800 |
| Carpenter தச்சு வேலை | 1200-1400 | 44400-51800 |
| Pipe Fabricator குழாய் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Steel Fixer கம்பி கட்டுவோர் | 1200-1300 | 44400-48100 |
| Electrician மின் இணைப்பாளர் | 1300-1500 | 48100-55500 |
| Aluminium Fabricator அலுமினியம் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Tinker டின்கர் | 1400-1500 | 51800-55500 |
| Mechanic (Diesel/ Petrol) மெக்கானிக் (டீசல் / பெற்றோல்) | 1500-1700 | 55500-62900 |
| Mechanical Engineers மெக்கானிக்கல் இன்ஜினியர் | 3000-5000 | 111000-185000 |

நிபந்தனைகள்: - இலவச தங்குமிட வசதி, வைத்திய வசதி, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள், இரண்டு வருட ஒப்பந்தகாலம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :- சுதாகரன் 0779580588

### Mantek Enterpries

No:- 535/2/1, Galle Road, Wellawatte, Colombo-06
T.P.NO:-011-4375911, Fax:- 0114510549, E.Mail:mantek.enterprises@yahoo.com

Labow Lic No: 1449

## union assurance — வேலை வாய்ப்பு

Trust in your tomorrow, today.

யூனியன் அஷ்யூரன்ஸ் என்பது இலங்கையின் மாபெரும் கூட்டு நிறுவனமாகிய ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் நிதி வலிமை, உறுதிப்பாடு என்பவற்றைப் பக்கபலமாகக் கொண்ட ஒரு முன்னணி நிறுவனமாகும். 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட எமது நிறுவனம் நாணயம், நிபுணத்துவம் என்பவற்றால் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் இதயங்களைக் கவர்ந்துள்ளது. நேர்மையும் வெளிப்படையுமான செயற்பாட்டிற்காக நாம் பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளோம். இன்று இலங்கையின் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் தனது நம்பிக்கை வாய்ந்த அலுவலர்கள் அணியில் இணைந்து கொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.




ஆயுள் காப்புறுதி துறையில் பதவி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு!!!

- பட்டதாரிகளுக்கு:–அடிப்படைச் சம்பளம் ரூபா 23,100/ இல் இருந்து
- திறமைக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் ரூபா 15,000/ இல் இருந்து
- உழைப்பிற்கேற்ற ஊதியம்
- வளமான எதிர்காலம்
- வசதியான வாழ்க்கை

யாவற்றையும் ஒரே இடத்தில் அமைத்துக் கொள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் நடத்தும் நேர்முகத் தேர்விற்கு தங்களை வரவேற்கின்றோம்.

**பதவிகள்**
1. காப்புறுதி ஆலோசகர்
2. தனிப்பட்ட நிதி ஆலோசகர்
3. தனிப்பட்ட நிதி முகாமையாளர்

### அடிப்படைத் தகைமைகள்

1. க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி
2. உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
3. விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள்
4. உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
5. திடசித்தம்
6. காப்புறுதி துறையில் முன்னனுபவம், மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.**

குறிப்பு: ஏற்கனவே வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஏன் தயக்கம்:– தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுய விபரக் கோவையுடன்

காலம்:– 02.02.2013 (சனிக்கிழமை)

நேரம்:– மு.ப. 9.30 மணி

இடம்:– யூனியன் அஷ்யூரன்ஸ், பி.எல்.சி.
139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(1588)

வ.றேமண்ட்- 077 3688791, அலகு அபிவிருத்தி முகாமையாளர் (UDM)
யூனியன் அஷ்யூரன்ஸ், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## முனிவரின் வைராக்கியம்

ஒரு மரத்தடியில் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார். அவர் ஒரு ஊசியில் நூலைக்கோர்த்து தன் வேட்டியில் இருந்த கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தார். அவர் கைதான் அந்த கடமையைச் செய்து கொண்டிருந்தது. ஆனால், அவர் மனமோ கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது. அப்போது அச்சமயத்தில் பார்வதியும் பரமசிவனும் ஆகாய வீதியில் வலம் வந்து கொண்டிருந்தார்கள். மரத்தடியில் ஒளிப்பிழம்பாக அமர்ந்திருந்த முனிவரை ஜகன் மாதாவாகிய பார்வதி நோக்கினாள். பரமசிவனிடம் ''அங்கே பார்த்தீர்களா?'' என்று கேட்டாள். ''பார்த்தேன்!'' என்றார் அவர்.

"பிறகென்ன? நாம் அவரைப் பார்த்த பின்பும் சும்மா போனால் எப்படி? வாருங்கள்! அங்கே சென்று அவருக்கு வரம் ஏதாவது கொடுக்கலாம்'' என்றார். அன்னை பரமசிவனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"அந்த முனிவரை பற்றி எளிதாக நினைத்து விடாதே! அவர் அந்த நிலைகளையெல்லாம் கடந்தவர். இப்போது நாம் அவரிடம் செல்வது வீண் வேலை. எனவே, அவரிடம் போக வேண்டாம் வா! நம் வழியில் நாம் போகலாம்!" என்றார் சிவபெருமான்.

ஜகத் பிதா இவ்வாறு கூறினாலும் ஜகன் மாதா அவரை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்துச் சென்றாள். முனிவர் அவர்களை நிமிர்ந்து பார்த்து, "அடடே! அம்மையும் அப்பனுமா!" என்று சொல்லி அன்புடன் வரவேற்றார்.

இருவருக்கும் குடிப்பதற்கு மோர் கொடுத்தார் முனிவர். அவ்வளவுதான்! அதைக் கொடுத்து விட்டு அவர் முன்பு போலவே துணியின் கிழிசலை தைக்க ஆரம்பித்தார்.

பரமசிவனும் பார்வதியும் சிறிது நேரம் பொறுமையுடன் அவருக்காக காத்திருந்து பார்த்தார்கள். அவர்களை முனிவர் நிமிர்ந்து பார்க்கும் வழியைக் காணோம். அவர்கள் இருப்பதை அவர் கண்டு கொள்ளவே இல்லை. ''சரி! நாங்கள் புறப்படுவோம்'' என்று அம்மையும் அப்பனும் குரல் கொடுத்தார்கள்.

"மிகவும் சந்தோசம், போய் வாருங்கள்! வணக்கம்" என்றார் முனிவர். என்று கூறிவிட்டு மீண்டும் துணியைத் தைக்க தொடங்கினார். பார்வதி பரமசிவனிடம் ஏதாவது கேளுங்கள்! என்பது போல் சைகை செய்தாள்.

அவரும் அதைப் புரிந்து கொண்டு முனிவரைப் பார்த்து, "தவச் செல்வரே, நாங்கள் ஒருவருக்கு தரிசனம் கொடுத்தால் அவருக்கு ஏதாவது வரம் கொடுத்து விட்டு போவதுதான் வழக்கம். ஆகவே உங்களுக்கு ஏதாவது வரம்...!" என்று ஏசால்லி இழுத்தார்.

முனிவர் மௌனமாகச் சிரித்தார்; "வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அதெல்லாம் இந்த கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்!" என்று கூறி மறுபடியும் தன் வேலையைத் தொடர்ந்தார்.

இருந்தாலும் பார்வதியும் பரமசிவனும் வரம் கொடுக்காமல் செல்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

முனிவர் பார்த்தார். "சரி, அப்படிக் கட்டாயமாக ஏதாவது வரம் கொடுத்து விட்டுத்தான் போக வேண்டும் என நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள். இந்த ஊசிக்கு பின்னாலேயே இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்!''என்றார்.

இதைக் கேட்டதும் பார்வதி பரமேஸ்வரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

எனவே, அவர்கள் "ஏற்கனவே இந்த ஊசிக்குப் பின்னால் நூல் போய்க்கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் ஏன் வரம் கொடுக்க வேண்டும்?'' என வினவினார்கள்.

"அதையேதான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்து கொண்டு வந்தால் வரவேண்டிய பலன் நியதிப்படி தானாகவே பின்னால் வரும்; நடுவில் நீங்கள் ஏன் எனக்கு வரம் கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பரமசிவனும் பார்வதியும் சிரித்துக் கொண்டே தங்கள் வழியே சென்றார்கள்.

மேலே கூறப்பட்ட கதையில் வரும் முனிவர் வேண்டுதல் வேண்டாமை என்ற நிலைகளைக் கடந்தவர். எதையும் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்காதவர்.

ஆகவே, எந்த ஆசையும் இல்லாதவர்களுக்கு எந்த தேவையும் இல்லை என்பதை முனிவரின் இந்தக் கதையின் மூலம் அறிகிறோம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பிள்ளைகளுக்கு ஆன்மீகத்தில் நாட்டத்தை ஏற்படுத்தி பொறுப்புமிக்க இளைய தலைமுறையை உருவாக்குங்கள்

## ஆச்சிரம திறப்பு விழாவில் செஞ்சொற் செல்வர் உரை



(யாழ்ப்பாணம்)

சுமைகளை சுகங்களாக கருதி இறை வழிபாட்டுக்கு நேரமொதுக்கு; பிள்ளைகளுக்கு ஆன்மீகத்தில் நாட்டத்தை ஏற்படுத்தி பொறுப்புமிக்க சமுதாயமாக இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்ட சிவபூமி ஞான ஆச்சிரமத்தை அமெரிக்க ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தலைமையுரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிள்ளைகளுக்கு ஆன்மீகத்தை சரியாக வளர்க்காததன் காரணத்தால்தான் இந்த யாழ்ப்பாணத்திலையா இப்படி நடக்கிறது என்று நாங்கள் ஒவ்வொரு நாளும் பார்த்து ஏங்குகின்றோம்.

உண்மையிலேயே ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளை ஆன்மீகத்தோடு அவர்களிடத்திலே சிறிய வயதிலேயே சிந்தனைக்குரிய நல்ல பொறுப்புக்களை கொடுத்தால் இந்த சமுதாயம் இந்த உலகத்தை நன்றாக அணிசெய்யும். எமக்கு இருக்கின்ற பெரிய கஷ்டமே இளைய தலைமுறை ஆன்மீகம் தெரியாதவர்களாகவும் பெரியவர்களை மதிக்கத் தெரியாதவர்களாகவும் இருப்பதேயாகும்.

எனவே, அந்த நிலையை மாற்றி அமைக்க ஒரு சிவபூமி அல்ல; ஒவ்வொரு ஊரிலும் இப்படி நல்ல ஆச்சிரமங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பொறுமையை வளர்க்கக் கூடியதாக கோவில்களில் இப்போது பிரசங்கத்திற்கே இடமில்லை. சமயத் தத்துவங்கள் கோயிலை பரிபாலிப்பவர்களுக்கு கூட கோவில் விடயங்கள் தெரியாமல் போய் விட்டது. இந்த பரிதாப நிலை மாற வேண்டும்.

இந்த நிலையை மாற்றுவதற்கு சிறிய வயதிலேயே பிள்ளைகளுக்கு சுருக்கமாக வேனும் இந்த சமய விடயங்கள் பற்றி தெரிய வேண்டும்.

மேலும் இந்த குப்பிளான் கிராமத்தில் சமய எழுச்சித் தேவை ஒன்று ஏற்பட்டதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பு படையெடுத்து வந்து எமது சமயத்தை காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

பலர் என்னிடம் தொடர்பு கொண்டு இந்தக் கிராமத்திலே எமது சமயம் பாதுகாப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். அதன் விளைவாக சிவபூமி ஞான ஆச்சிரமம் பல மகான்கள் வந்துபோன இந்த வீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆச்சிரமத்தில் ஈழத்து சித்தர்கள், இந்தியாவின் புகழ்பூத்த சித்தர்களின் படங்கள் உள்ளே வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமத்திற்கு இவ்வாறானதொரு ஆச்சிரமம் அவசர தேவையாக இருந்தது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய இந்தக் குப்பிளான் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி ஆச்சிரமத்தை இளைய தலைமுறை அதிகளவில் நாட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆச்சிரம திறப்பு விழாவில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மய மிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், யாழ்ப்பாணம் வேதாந்த மடம் சிவத்திரு ஸ்ரீ வேத வித்தியாசாகர் சுவாமிகள் உள்ளிட்ட சுவாமிகள், பேராசிரியர்கள், சைவப் புலவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குப்பிளான் பகுதி சைவ மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 240 | 160 |
| உருளைக்கிழங்கு | 50 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 300 | 300 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 200 | 170 | 200 | 200 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 90 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 180 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 160 | 140 |
| லீக்ஸ் | 140 | 180 | 160 | 160 |
| பீற்றூட் | 110 | 100 | 120 | 140 |
| கறிமிளகாய் | 220 | 280 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 400 | -- | -- |
| போஞ்சி | 130 | 90 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 180 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 15-25 | 30 | 50 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-55 | 40 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 90 | 100 | 120 | 130 |
| வெங்காயப்பூ | 10-20 | 180 | 80 | 80 |

# இராசி பலன்

30.01.2013
(தை 17, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
திருதியை முற்பகல் 10.49 மணிவரை
பூரம் முன்னிரவு 7.26 மணிவரை
இராகுகாலம் 12.36-2.06 மணிவரை
சுபநேரம் 5.06-6.36 மணிவரை
சங்கடகர சதுர்த்தி

**மேடம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், கணபதி வழிபாடு ஆனந்தம் தரும்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், தனவரவில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழி ஒற்றுமை பலப்படும், குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக முக்கியமான பொறுப்புக்களை ஏற்க வேண்டி வரலாம், அந்நியர் சந்திப்புண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** வழிபாடுகளில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைதூரப் பயணங்கள் கைகூடலாம், வருமானம் திருப்தி தரும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லத் தேடி வரலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டு பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றகரமான நாள், பண வருவாய் திருப்தி தரும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கௌரவமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மின்சாரம் தடைப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைசெய்யப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று புதன்கிழமை மாலுசந்தி முதல் மடத்தடி வரையான பிரதேசம், கம்பர்மலைப்பிரதேசம், வடமராட்சி கிழக்கு, நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி ஒரு பகுதி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

நாளை வியாழக்கிழமை சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர்கடைப் பிரதேசம், நயினாதீவுப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் இரு பகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (அ-9)




# மாணவிகளை ஏற்றிசெல்லும் சில பேருந்துகள் சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதில்லை!

## பெற்றோர் குற்றச்சாட்டு

யாழ்.மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் உள்ள பெண்கள் பாடசாலைகளுக்கு மாணவிகளை ஏற்றி இறக்கும் சில தனியார், பேருந்து சிற்றூர்தி சேவையினர் மாணவிகளின் நலனில் அக்கறை செலுத்தாமல் தமது தனிப்பட்ட வருமானத்தை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படுவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவது, யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் யாழ்.நகரப் பகுதியிலுள்ள பெண்கள் பாடசாலைகளுக்கு மாணவிகளை ஏற்றி இறக்கும் பணியில் அனுமதி பெற்றும் பெறாமலும் சில தனியார் பேருந்து, சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடுகின்றன.

இதில் சில இடங்களில் இருந்து சேவையில் ஈடுபடும் சில பேருந்துகள் அதிக கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அறவிடுவதுடன் பாடசாலை விடுமுறை காலத்திற்கும் கட்டணம் அறவிடுகின்றனர்.

குறிப்பாக வலிகாமம் பகுதியில் இருந்து சேவையில் ஈடுபடும் சில பேருந்து உரிமையாளர்கள் இச்செயலில் ஈடுபடுகின்றனர்.

ஆசன மட்டத்தை விட அளவுக்கு அதிகமாக மாணவிகளை ஏற்றி செல்வதால் கால் கடுக்க நின்று பயணம் செய்யும் மாணவிகள் மயங்கி விழுந்த சம்பவங்களும் நடை பெற்றுள்ளன.

பெண் பிள்ளைகள் பயணிக்கும் பேருந்துகளில் பெண் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென சட்டவிதிமுறை உண்டு. ஆனால், அது யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இச்சேவையில் ஈடுபடும் பேருந்துக்கள் சிற்றூர்திகளின் கண்ணாடிகள் கறுப்பு நிற ஒட்டுத்தாளினால் ஒட்டப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செயற்பாடாகும்.

எனவே, யாழ்.மாவட்ட அரச அதிபரும் பாடசாலைக்கு அனுமதி வழங்கும் அதிகாரிகளும் கவனம் செலுத்தி தங்களுக்கு சிறந்த முடிவை வழங்கவேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவிகளுடைய பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-15)

# 30 வருடங்களாக முள்ளி வீதி புனரமைக்கப்படவில்லை

ஆனைக்கோட்டை முள்ளி கிராம வீதிகள் 30 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியில் தினமும் பல நூற்றுக்கணக்கான மக்கள் பயணம் செய்வதால் குன்றும் குழியுமான வீதியில் பல விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வீதியில் பல இலட்சம் ரூபா செலவில் வாய்க்கால் நிர்மாணிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளபோதும் வீதியானது புனரமைக்கப்படாமையால் வாய்க்கால் பழுதடையக்கூடிய நிலையும் உள்ளது.

இதில் முள்ளி முதலாம் ஒழுங்கை, டச்சு வீதி 2 ஆம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி ஆகியவையே புனரமைக்கப்படாதுள்ளன.

மழைக்காலங்களில் இவ்வீதியால் பயணிக்க முடியாத அவலநிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் உடன் விரைந்து நடவடிக்கை எடுத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-18)

# ஆரம்ப சுகாதார நிலையத்தை இயங்கவைக்க கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை முள்ளி கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் ஒருவருடகாலமாக பூட்டப்பட்ட நிலையில் இருப்பதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் வேறு வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது.

அத்துடன் அவ் ஆரம்ப சுகாதார நிலையம் பூட்டப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி பற்றைக்காடாக காணப்படுகின்றது.

இதனால் நுளம்புகள் பெருகி அருகில் உள்ளவர்களுக்கு நுளம்பினால் ஏற்படக்கூடிய டெங்குநோய் பரவக்கூடிய நிலை தோன்றும் என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரியர்கள் உடன் விரைந்து இவ் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-18)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த கணேசானாந்தம் சுனாதீரன் கடந்த 23 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரும் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றி தற்பொழுது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

* * *



ஆவரங்கால் சிவன் வீதி புத்தூரைச் சேர்ந்த வல்லிபுரம் நவலோகநாதன் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அச்சுவேலி மகாவித்தியாலத்தில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நவீன சந்தைப்பகுதியில் 9 கடை முகப்புகள் அகற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர் நவீன சந்தைப் பகுதியில் 9 கடைகளின் முகப்பு பகுதி யாழ்.மாநகர சபையினால் அகற்றப்பட்டது.

கடைகள் முகப்பு அகற்றப்பட்டு அதற்கு பதிலாக கொட்டகை போடப்படவுள்ளதாக மாநகர சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி கடைகளின் முகப்பினை யாழ்.மாநகரசபையினர் அகற்றுவதாக ஒரு சில கடை உரிமையாளர்கள் தெரிவித்ததோடு தொழில் நடவடிக்கையினை பாதிக்கும் வகையில் நடந்து கொள்கின்றனர் எனவும் குற்றம் சாட்டினர்.

இதேவேளை, கடந்த வருடம் குறித்த கடைகளின் உரிமையாளர்களுக்கு கடைகளின் முகப்பு பகுதி யாழ்.மாநகர சபையினால் அகற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)




## 120 ஆவது ஆண்டு நிறைவு விழா திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் 120 ஆவது ஆண்டு நிறைவு, புதிய கட்டடத்திறப்பு விழா, பரிசளிப்பு விழா மற்றும் தமிழ் காந்தம் சஞ்சிகை வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாசாலை அதிபர் கே.சசிதரன் தலைமையில் வித்தியாசாலை புதிய மண்டபத்தில் நடை பெறும்.

இந்நிகழ்வுகள் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் மேற்படி திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டதாக வித்தியாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நான்கு இடங்களில் வாகன தரிப்பிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 4 இடங்களில் வாகனத் தரிப்பிடம் அமைக் கப்படவுள்ளது என யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவி த்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சத்திர சந்திக்கும் வேம்படி சந்திக்கும் இடை யில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 4 இடங்களில் வாகனத் தரிப்பிடம் அமைக்கப் படவுள்ளது. ஆஸ்பத்திரி வீதியின் நடுவே அமைக்கப்படவுள்ள வாகனத் தரிப்பிடங்க ளில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு பண மும் அறவிடப்படவுள்ளது.

இதில் சத்திர சந்திக்கும் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடையில் உள்ள பகுதியில் வர்த் தக நிலையங்களுக்கு பொருட்களை இறக் குவதற்கும் ஏற்றுவதற்கும் வரும் வாகனங்க ளும்-சந்தைகளுக்கு வரும் வாகனங்களும் தரிப்பிலிடப்படவுள்ளன. கனரக வாகனங்கள் இந்த இடத்தில் அதிகளவில் தரிப்பிலிடப்ப டும். இதனை விட கஸ்தூரியார் சந்திக்கும் யாழ்.பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாகவுள்ள பகுதி யில் ஹயஸ் வான், சிறிய ரக ஹன்ரர் வாக னங்கள் நிறுத்தப்படும்.

அடுத்து பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும் செலான் வங்கிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆட்டோக்கள், வைத்தியசாலைக்கு நோயா ளர்களை ஏற்றிக் கொண்டு வரும் வாகன ங்கள், கார் என்பன தரிப்பிலிடப்படும்.

இதேவேளை, செலான் வங்கிக்கும் யாழ். வேம்படி சந்திக்கும் இடைப்பட்ட பகுதியிலும் வாகனத்தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, நவீன சந்தைப் பகுதியில் மாநகர சபைக்கு சொந்தமான மூன்று இடங்க ளில் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்ப டவுள்ளன. இந்தத் தரிப்பிடத்தில் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி என்பன தரிப் பிலிடப்படவுள்ளது என அவர் மேலும் தெரி வித்தார். (அ-6)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தை மாத வெளி யீடான ஞானச்சுடர் சஞ்சிகை வெளிவந்து ள்ளது.

இந்நூலானது ஆன்மீகத்தின் இன் றைய தேவை, எவ்வினையும் வேரறுக்கும் விநாயகன், ஶ்ரீரமண நினைவலைகள், சிறுவர் கதைகள், சைவசமய வினாவிடை, திருமந்திரக் கதைகள், கந்தரனுபூதி, தொடர் கதை ஆகியவற்றை தாங்கி வெளிவந்து ள்ளது. (அ-9)

# தே.அ.அட்டை வழங்க இலவச நடமாடும் சேவை

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டை யினைப் பெற்றுக்கொள்வதற்கான இலவச நடமாடும் சேவையானது நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப் பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டப த்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவினைச் சேர்ந்தவர்கள் இது வரை காலமும் தம் தேசிய அடையாள அட் டையினை பெற்றுக்கொள்ள தவறியிருப் பின் அல்லது தொலைத்திருப்பின் பிரதி அடையாள அட்டையினை பெற்றுக்கொள் ளலாம். அல்லது புதுப்பிக்க வேண்டியிரு ப்பின் இவ் இலவச நடமாடும் சேவையில் கலந்து கொண்டு தம் தேவையினை நிறை வேற்றிக் கொள்ளலாம்.

அத்துடன் இப்பிரதேச செயலக பிரிவி லிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்தவரும் பொதுமக்களும் இச்சேவையில் கலந்து கொள்ளமுடியும் என தெல்லிப்பழை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-9)


## TOSHIBA es 233 தற்போது கொழும்பு விலையில்

புதிய கையிருப்புடன்




TOSHIBA,CANON, SHARP, KEOCERA MITA, KONICA MINOLTA, OLIVETI, XEROX
ஆகிய சகல விதமான போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கும் உரிய
**TONER, DRUM, CLEANING BLADE, DEVELOPER** மற்றும்
சகல விதமான உதிரிப் பாகங்களும் தொழில்நுட்ப சேவைகளுடன்
மிக மலிவான விலையில்பெற்றுக்கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு 5-15% கழிவு உண்டு.

புதிய விலையில் *TOSHIBA, CANON ,SHARP*
***DRUM - 2200/-***

வெகு விரைவில்
TOSHIBA es455
- 1,85,000/-

புதிய மொடல் கலர்
KONICA MINOLTA c253
- 1,90,000/-

(1606)

**NORTHERN OFFICE AUTOMATION**
738A Hospital Road, Jaffna.
CALL : 021 222 0512 Mobile - 0773475220 , 0777358346 .



## கல்வி ஆண்டு 2013
### விண்ணப்பம் கோரல்

**சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்**

**(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS –U.K** (சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம்)இன் கற்கை நெறியை யாழ்நகரில் **K-AIMS** கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

**K-AIMS** ஆனது 2012ம் ஆண்டு தனது யாழ்நகர கிளையை ஆரம்பித்தது முதல் தனது இரண்டாவது பிரிவு மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்துள்ளது. இவ்விண்ணப்பக் கோரலானது மூன்றாம் பிரிவுக்கானது. வகுப்புக்கள் FEBRUARY 5ம் திகதி முதல் ஆரம்பமாகும்.

**ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளை கொண்டது.**

1. **DIPLOMA** - 6 மாதம்
2. **DEGREE** - ஒருவருடம்
3. **ACCA** - ஒருவருடம்.

* O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்

* HNDA, யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 31 JANUARY 2013**

**மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும்**
**0772 555 814**

**Colombo**
Level 4
Access Towers
278, Union Place
Colombo 02

**JAFFNA**
3 -1/2
Sirambiyadi Lane
[ Off Stanly Road]
Jaffna

(சு/2265)

முறைப்பாடுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் **0771065363**



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1959 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L, Reliance Travels, Level<br>விவாகரத்துப் பெற்றவர்<br>தொ.இ: B -1072 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>தகைமை/ தொழில்: A/L , அழகுக்கலை<br>தொ.இ: G -1144 |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 65.75, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, UK (PR)<br>தொ.இ: B -1073 | பிறப்பு: 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 4, 7 இல் செவ்.<br>உயரம்:5'5"<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G-1147 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 6'<br>கி.பா: 39, 12 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: B.Sc, Business Development Officer (USA PR)<br>தொ.இ: B -1074 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 21 , 8 இல் செவ்.<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: A/L (விவாகரத்துப் பெற்றவர்)<br>தொ.இ: G -1149 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 25<br>தகைமை/தொழில்: MBBS (Dr)<br>தொ.இ: B -1075 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>2இல் சூரி, செவ்.<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்: முகாமைத்துவமாணி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ: G -1151 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் உதவியாலேயே ஆளும்கட்சி இயங்குகிறது

## விக்கிரமபாகு தெரிவிப்பு

அமெரிக்காவின் நிதி உதவியினாலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இயங்குகின்றது. எனவே, நிச்சயம் அந்நாட்டின் அழுத்தத்திற்கு அரசாங்கம் அடிபணியும் என்று நவசமசமாஜக்கட்சியின் தலைவரானவிக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவின் அழுத்தம் வெறும் புஸ்வாணமாகும்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முக்கிய பிரதிநிதிகளின் இலங்கை விஜயமானது தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அமைய வேண்டும். நாட்டில் மனித உரிமைகள்மீறல்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாமை தொடர்பில் அமெரிக்கா கடுமையான நிலைப்பாட்டிலேயே உள்ளது.

எனவே, எதிர்வரும் மார்ச் மாதம் நிச்சயம் இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா ஐ.நாவில் முன்வைக்கும். ஆனால், இந்த அரசாங்கம் அமெரிக்காவின் பணத்தில் ஓடுகின்றது.

எனவே, அரசாங்கத்திற்கு எதிரான அழுத்தம் எவ்வாறு இருக்கப் போகின்றது எனத் தெரியாது . இந்தியா உண்மையிலேயே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில் அக்கறை கொள்ளவில்லை. தமிழரைப் பயன்படுத்தி இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகித்து அதன் மூலம் காணிகளை கொள்ளையடிப்பதையும் வர்த்தகத்தை விஸ்தீரணப்படுத்தவுமே இந்தியா முயல்கிறது என்றார். (அ-2)

# முசலி பிரதேசத்திற்குள் கட்டாக்காலி மாடுகள்

## கட்டுப்படுத்தக் கோரிக்கை

(மன்னார்)

முசலி பிரதேச சபைக்குட்பட்ட மணற்குளம், இலந்தைக்குளம், வெளிமலை மேத்தன் வெளி, சிலாவத்துறை, பொற்கோணி மற்றும் பண்டாரவெளி இதுபோன்ற இன்னும் பல மீள்குடியேற்ற கிராமங்கள் உள்ளன.

இக்கிராமங்களில் கடந்த காலங்களை விடவும் இம்முறை கட்டாக்காலி ஆடு, மாடு அதேபோன்று யானைகளின் அட்டகாசம் வெகுவாக அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாட்டு உரிமையாளர்கள் தங்களின் மாடுகளைச் சரியாக பராமரிக்காமையினால் வீதிகளில் ஆங்காங்கே அலைந்து திரிவதனால் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளுக்கும் தடையாக உள்ளன. தற்போது முசலி பிரதேச மக்கள் விவசாய பயிர்ச்செய்கை செய்துள்ளனர். மதம்பிடித்த யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, முசலி பிரதேசசபை தவிசாளர் முசலி மக்களின் வாக்குகளை பெற்ற உறுப்பினர்கள் மற்றும் முசலி பிரதேசசபை செயலாளர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-2)

# மாவை எம்.பி.சுவிஸில் உரையாற்றவுள்ளார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சுவிட்சர்லாந்திலுள்ள சூரிச்சில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை இனப்பிரச்சினையும் சமகால அரசியலும் என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். சுவிஸ் சிவராம் ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்த கருத்தரங்கு VOL KSHAUS ZU RICH (Sizungszi mmer 22) Stauffacherstrasse 60,8004 Zurich என்ற முகவரியில் உள்ள மண்டபத்தில் பிற்பகல் 5 மணியளவில் நடைபெறவுள்ளது. (அ-2)

# திருமண வீட்டில் பரிமாறப்பட்ட உணவில் புழுக்கள் கண்டுபிடிப்பு

## உரிமையாளர் மீது வழக்கு

(குருமன்காடு)

திருமண வைபவம் ஒன்றில் பரிமாறப்பட்ட உணவில் புழுக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து குறித்த திருமண மண்டபத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது திருமண மண்டபத்தின் உரிமையாளர் சமுகமளிக்காததையடுத்து அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள திருமண மண்டபம் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருமண வைபவத்தில் பரிமாறுவதற்காக வைக்கப்பட்டிருந்த சமைக்கப்பட்ட உணவிலேயே புழுக்கள் காணப்பட்டன. இது தொடர்பில் வவுனியா பொது சுகாதார பரிசோதர்களுக்கு உடனடியாக தகவல் வழங்கியதையடுத்து அங்கு விரைந்த பொது சுகாதார பரிசோதகர்கள் உணவுகளை பரிசோதித்தபோது உணவில் புழுக்கள் அதிகம் காணப்பட்டுள்ளதை கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து மண்டப உரிமையாளருக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினமே உணவுகளை அழித்துள்ளனர். (அ-2-250)

# கட்டைக்காட்டு கரையோர வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(பொற்பதி)

ஏ- 9 வீதியில் இருந்து இயக்கச்சி கோயில் வயல்,சங்கத்தார்வயல் ஊடாக புல்லாவெளியை கடந்து வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டின் கரையோர வீதியை சென்றடைகின்ற சுமார் 5 கிலோ மீற்றர் நீளமான வீதி கவனிப்பாரற்று காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கிய 6 இற்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மேற்குறிப்பிட்ட வீதியையே துரிதபோக்குவரத்தை கருத்திற்கொண்டு பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இலேசான மழை பெய்தால் கூட இந்த வீதிகளில் நீர் தேங்கி காணப்படுகின்றது. இதனை விட வடமராட்சி கிழக்கின் கிழக்கு பகுதி கிராமங்களில் பிடிக்கப்படும் கடல் உணவுகளைக் கூட இலங்கையின் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு இந்த வீதியையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, போக்குவரத்தில் ஏற்படும் சிரமங்களைக்கருத்திற்கொண்டு உடனடியாக இவ்வீதியை செப்பனிட்டு தர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-64)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(முல்லைத்தீவு)

முல்/விசுவமடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் மா.ராஜகுமார், சிறப்பு விருந்தினர்களாக விசுவமடு 572 ஆவது படைப்பிரிவு கேணல் பனன்வில, விசுவமடு 12 எஸ்.எல்.எஸ். ஆர். லெப்ரினன் கேணல் எனோட், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வ.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சவுரி/ குறட்டைப் பழம்

**Botanical Name-**
***Trichosanthus bracteata***
**Family-Cucurbitaceae**
**Sinh- Tittahondala**

நீண்ட மர ஏறுகொடியாகும். இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. 10-12.5 செ.மீ. நீளமும் அகலமுமுடையது. 3-5 பிளவுபட்ட இலையாகும். மேற்பக்கம் கரும்பச்சை நிறமும் கீழ்ப்பக்கம் வெளிறியும் காணப்படும்.

இலைக்காம்பு 2.5-7.5 செ.மீ. நீளமுடையது. ஒருபாலான பூக்கள். பிரகாசமான றோஸ் நிறமுடைய ஒழுங்கான பூக்கள். பெரிய சிவப்பு நிறமுடைய பழம். தடித்த உறையுடையது. (pericarp) விதைகள் பழத்தினுள் புதைந்து காணப்படும். கரும்பச்சை பழச்சதையினுள் மண்ணிறமுடைய விதைகள் புதைந்து காணப்படும். ஒவ்வொரு விதையைச் சூழவும் கரும்பச்சை பழச்சதை சூழ்ந்து இருக்கும். மாசியிலிருந்து ஆனிவரை பூக்கள் பூக்கும்.

விதைகள்மூலம் இனவிருத்தி செய்யலாம். உலர் பிரதேசத்தில் பரம்பல் அதிகம். வன்னிப் பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகம்.

குறிப்பு:- மூலிகைகளை சரியான முறையில் தூய இனத்தை இனங்காணல் அவசியம். ஏனெனில் உடன் மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படும். சித்தமருந்துகளில் உடன் மூலிகைகளுக்கு பதில் உலர் மூலிகைப் பகுதிகளை பயன்படுத்தினால் எதிர்பார்க்கப்படும் வேதியற்பொருள் கிடைக்காமல் போவதால் மருந்தின் தரமும் குறைகின்றது.


அத்துடன் மூலிகை, மூலிகைகளின் பாகங்களை உருவவியல் ரீதியில் இனங்காணும் அறிவு சித்தமருந்துத் தயாரிப்புகளுக்கு முக்கியம். அத்துடன் மூலிகைகளில் பல சிற்றினங்களும் உண்டு. தூயமூலிகைகளுக்கு பதிலான கலப்பட, பதில்(Adulteration & Substitut) மூலிகைகளை பயன்படுத்தும் போது மருந்துகளின் வினைத்திறன் முற்றாக பாதிப்படையும்.

### சவுரிப்பழத்தின் மருத்துவ குணங்கள்

இதன் பழம் பேதி உண்டாக்கும் தன்மை உடையது. சில பிரதேச மக்கள் காக்கைக் கொவ்வை என இதனைக் குறிப்பிடுவார்கள். காகம் இதனை சாப்பிடுவதாக குறிப்பிடுவார்கள். இதனுடைய பழத்தை சோற்றுடன் கலந்து சாப்பிடக் கொடுத்தால் காகம் இறந்து விடும். இதை நன்றாக இடித்துத் தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி, காது, மூக்கு, செவி இவ்விடங்களில் உண்டாகும் புண் முதலியவற்றிற்கு பூச சுகமாகும்.

பழச்சாற்றை நல்லெண்ணெய்யோடு சேர்த்துக் காய்ச்சி தலை முழுகி வர தீராத் தலைவலி, ஒற்றைத் தலைவலி முதலியவை தீரும். 300 மில்லி சாற்றுடன் 500 மில்லி நல்லெண்ணெய் கலந்து காய்ச்ச வேண்டும்.

இதன் வேரில் நச்சுத்தன்மை இல்லை. இதன் வேரை குடிநீரிட்டு அதாவது ஒரு பங்கு



வேரிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் தணியும்.

வெண்குட்டத்திற்கு இதன் இலைச்சாற்றை பூசி வர வெண்குட்டம் குறையும். இதன் வேருடன் கொம்மட்டி வேரும் சம எடை சேர்த்து மைபோல அரைத்து நீரிழிவு நோயால் ஏற்படும் பினலைக் கட்டிகளுக்கு பற்றிடலாம். (Carbuncles).

### சவுரி எண்ணெய்

| | |
|---|---|
| சீரகம் | -200 கிராம் |
| நல்லெண்ணெய் | - 800 மில்லி |
| சவுரி பழச்சாறு | -700 மில்லி |

சீரகத்தை குடிநீர் காய்ச்சி 100 மில்லி அளவு எடுத்து எண்ணெயிலும் சாற்றிலும் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாக காய்ச்சி முழுகி வர உஷ்ண ரோகம், கபாலச் சூடு (தலைச்சூடு), கபால நீர்க்கட்டு (தலையில் நீர் கோர்த்தல்) இவை தீர்ந்து கண் குளிர்ச்சியடையும். முடி நன்கு கருமையாக வளரும்.

குறிப்பு:- இதன் பழம் உட்பிரயோகமாக எடுக்கும் போது நீர் மலம் போக்கியாக (Purgative) ஆக செயற்படும். எனவே, வைத்திய ஆலோசனையுடன்தான் உள்ளுக்கு பயன்படுத்தல் வேண்டும்.

திருமதி வியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

☆ இதனுடைய பூக்களையும் வேரையும் நன்கு சுத்தம் செய்து சம அளவு எடுத்து மைபோல அரைத்து நாட்பட்ட புண்களுக்கும் பினலைகட்டிகளுக்கு வைத்துக் கட்ட விரைவில் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிசார் நிறுவனங்கள் ஷிராணிக்கு அழைப்பு



சர்வதேச நீதிசார் நிறுவனங்கள் பல ஷிராணி பண்டார நாயக்கவிற்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

சர்வதேச நீதிமன்ற சேவை நிறுவனங்கள் பல தம்முடன் இணைந்து செயற்படுமாறு ஷிராணிக்கு அழைப்பு விடுத்துள்ளன. இதேவேளை சர்வதேச நீதிமன்ற ஆணைக்குழுவும் ஷிராணிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க பதவி விலக்கப்பட்டமைக்கு பல சர்வதேச அமைப்புக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் அவைதங்களுடன் இணைந்து செயற்படுமாறு தற்போது அழைப்பு விடுத்துள்ளன.

எனவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் இன்னமும் தீர்மானிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மேர்வின் புதல்வர்கள் மீது வழக்கு; ஆலோசனை பெறுகிறது பொலிஸ்

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க மற்றும் றெஹான் விஜயரட்ன உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசனை பெற்றுக் கொள்ளப் போவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இராணுவ மேஜரொருவரைத் தாக்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்படுவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவிருப்பதாக கொம்பனி வீதி பொலிஸார் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே இராணுவ மேஜரொருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்றதுடன் சந்தேக நபர்கள் எட்டு நாட்களுக்கு பின்னரே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா மற்றும் றெஹான் விஜயரட்னவை பிணையில் செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதிமன்றம் செப்டெம்பர் 21 ஆம் திகதி அனுமதியளித்தது. தலா ஒவ்வொருவருக்கும் ஒரு மில்லியன் ரூபா பிரகாரம் இரு சரீரப் பிணைகளில் செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதிமன்றம் அனுமதியளித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# கொம்பனி வீதி மக்களை வெளியேறுமாறு உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டத்துக்கமைய வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்படுவீர்கள் என்று தாம் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு கொம்பனி வீதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த உத்தரவு கோத்தபாய ராஜபக்ஷவினால் பிறப்பிக்கப்பட்டதாக கொம்பனி வீதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது வீடுகளை விட்டு வெளியேறுவதற்காக அரசாங்கம் தமக்கு அளித்த நான்கு யோசனைகளை தாம் நிராகரித்தமையை அடுத்தே தமக்கு வெளியேறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கொம்பனி வீதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொம்பனி வீதி மக்கள் தமது யோசனைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் சட்டத்தின் கீழ் சட்டவிரோத குடியிருப்புகள் என்ற அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோத்தபாய இதன்போது எச்சரித்துள்ளார்.

கொழும்பு நகரை அலங்கரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கொம்பனி வீதியின் 500 குடும்பங்களை வேறு இடங்களுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்காக குறித்த காணியை இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி நிறுவனம் இந்திய டாடா நிறுவனத்துக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்திப்பில் கொழும்பு மாநகர மேயர் உட்பட்ட அதிகாரிகளும் உடனிருந்தனர். (அ-2)

# சக்திபுரம் கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்குமா?

## மக்கள் காத்திருப்பு

(சிவநகர்)

உருத்திரபுரம் எள்ளுக்காடு சக்திபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இப்பிரதேசத்திற்கு மின்சார தூண்கள் நாட்டப்பட்டு கேபிள்களும் பொருத்தப்பட்டுள்ளன.

உடனடியாக வீட்டு மின்னிணைப்பு வேலைகளை செய்யுமாறும் உடனடியாக மின்சாரம் வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் இங்கு வசிக்கும் மக்கள் தமது நகைகளை அடைவுவைத்தும் மிகவும் பொருளாதார கஷ்டநிலையில் கடன்பட்டும் தமது மின்னிணைப்பு வேலைகளை செய்து முடித்து காத்திருக்கின்றனர்.

போர்ச்சூழலின்போது அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக நிற்கும் இம்மக்கள் மின்சார வசதி கிடைத்தால் ஓரளவுக்கேனும் தமது வாழ்க்கையை மேம்படுத்தலாம் என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட மின்னிணைப்பு வேலையில் எவ்வித பயனும் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் வழங்குவதிலுள்ள தடங்கலுக்கு யார் காரணம்? எனவும் அங்கலாய்க்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-254)

# ஷிராணிக்கு எதிரான நடவடிக்கையில் நாட்டுக்கு நன்மை- ஜனாதிபதி மஹிந்த

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணையின் மூலம் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அமைப்பிற்கு அமைவான முறையில் நடாளுமன்றின் ஊடாக முன்னாள் பிரதம் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக குற்றவியல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மனச்சாட்சிக்கு இணங்க இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. குற்றவியல் பிரேரணையின் மூலம் நாட்டுக்கு ஓர் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

நீதிமன்றின் உயர் பதவிகளை வகித்தாலும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் தண்டனை விதிக்கப்படும் என்று ஓர் வலுவான செய்தி மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் முறைகேடுகள் ஏற்பட்டால், அது தொடர்பில் நாடாளுமன்றில் நடவடிக்கை எடுக்க முடியும். இது அரசியல் அமைப்பிற்கு அமைவானது.

குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றுமாறு ஜே.வி.பி.யும், ஐக்கிய தேசியக்கட்சியுமே கோரியிருந்தன. அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்கின்றது என்பது அதன் மூலம் புலனாகியுள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ-2)

# பெரியதம்பனை கிராமத்தில் வீட்டுத்திட்டம் கையளிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய தம்பனை கிராமத்தில் மீள்குடியேறியோருக்கு வீட்டுத்திட்டத்தினை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏ.எஸ்.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இவ்வீடமைப்புத் திட்டத்தில் 66 பயனாளிகள் வீடுகளை பெற்றிருந்ததுடன் ஒவ்வொரு வீடும் 4.5 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர், மனிதவள முகாமையாளர் மற்றும் பெரிய தம்பனை கிராமசேவகர் வீட்டுத்திட்டத்தை பெறும் மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-9-250-266)

# இரணைமடு குளத்தில் தங்கி நின்று மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்

## மீனவர்கள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் முதலைகளின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரணைமடுக்குளத்தின் ஊடாக மீன்பிடி தொழிலை நம்பியிருக்கும் சாந்தபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் மீன்பிடிக்காக கட்டப்படும் வலைகள் முதலைகளின் தாக்கத்தினால் பாதிப்படைகின்றன.

குளத்தின் கரையோரமாக முதலைகள் காணப்படுவதால் அங்கு மீன்கள் குறைவாக காணப்படுகின்றன.

இக்குளத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வலைகள் கட்டப்பட்டு வலைகளை மீளவும் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வலை கட்டியுள்ள நேரத்தில் கூட மீனவர்கள் தங்கி நின்று முதலைகளை கலைத்து விட்டு மீன்பிடிக்க பாதுகாப்பை காரணம் காட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் மீன்பிடிக்க என்று அனுமதிக்காது தொடர்ச்சியாக இக்குளத்தில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கினால் முதலைகளின் தாக்கத்தை ஓரளவேனும் குறைக்க முடியும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்றொழிலை நம்பி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இம் மீனவர்கள் தமது நிலையை யாரும் கருத்திற் [illegible] பார்த்துள்ளனர். [illegible]

# இந்தியருக்கு அபராதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை பகுதியில் இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து தொழில் புரிந்த நெல் இயந்திரம் ஒன்றை இயக்கிக் கொண்டிருந்த வேளை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு [illegible] (அ-2)

# மரண அறிவித்தல்

மண்ணில் 20 11 1947

விண்ணில் 26 01 2013



## நவரட்ணம் பாலசுப்பிரமணியம்

அத்தாய் பூநகரியைப் பிறப்பிடமாகவும் செப்பல் ஒழுங்கை வெள்ளவத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த சனிக்கிழமை 26.01.2013 அன்று அவுஸ்ரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நவரட்ணம் சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலசென்ற கனகரட்ணம் லட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், நாளாயினியின் அன்புக்கணவரும், நந்தன் (பிரான்ஸ்), நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற சிவயோகரத்தினத்தின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற மகேஸ்வரி, புவனேஸ்வரி, காந்திமதி மற்றும் தையல் நாயகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் பரனீதரன், மாலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சகிஷ்ணவி, கோபிராம், மனுவித்தியா, நிருபன், நிதர்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2013) புதன்கிழமை அவுஸ்ரேலிய நேரப்படி மு.ப 9.30 - 10.30 மணியளவில் அவுஸ்ரேலியாவில் உள்ள **South Chapel** என்னும் இடத்தில் அமைந்துள்ள **Rookwood** மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (1601)

இல. 3-5/3, முதலாவது செப்பல் ஒழுங்கை வெள்ளவத்தை. 0755 668036


தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இவன் அன்றோ தூதன்!

## அம்புலிமாமா கதைகள்



ஜெயசிலமன்னனின் தூதன் திடீரென இறந்துபோக அவன் இடத்தில் ஒரு புதிய நபரை உடனே தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைமை உண் டாக மன்னன் அந்தப் பொறுப்பை முதன்மந்திரி சுதாமரிடம் ஒப்படைத்தான்.

அதைப்பற்றிய மன்னரின் அறிவிப்பினையொட்டி நாடெங்கிலும் இருந்து பல அறிஞர்கள் அந்தப்பதவிக்குப் போட்டியிட்டனர். அவர்களில் மந்திரி நீண்டநேர ஆய்வுக்குப் பின் சுமுகன், அனந்தன் ஆகிய இருவரை மட்டும் தேர்வு செய்தார். அவர்களில் ஒருவனை மட்டுமே ராஜதூதனாகத் தேர்ந்தெடுக்கமுடியும். அவர்கள் இருவரையும் அரசாங்க விருந்தினர்களாக அழைத்த மந்திரி சுதாமர் இருவரையும் அரண்மனையில் தனியறையில் தங்கச்செய்து சகல வசதிகளும் அளித்து உபசாரம் செய்வித்தார். மறுநாள் சுதாமர் மன்னருடன் தன் சிறப்பு விருந்தினர்களை சந்திக்கச் சென்றார். முதலில் அனந்தனை அவனது அறையில் இருவரும் சந்தித்தனர். மன்னர் அனந்தனிடம் பொதுவான விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்க சுதாமர் மட்டும் வந்ததுமுதல் அந்த அறையில் எதையோ தேடிக் கொண்டிருந்தார். நடுநடுவே அவரது செய்கையை கவனித்த அனந்தன் கடைசியில் மந்திரி பக்கம் திரும்பி மந்திரி அவர்களே! நீங்கள் வந்ததுமுதல் இந்த அறையில் எதையோ கண்களால் தேடிக்கொண்டேயிருக்கிறீர்களே! அது என்னவென்று தெரிந்து கொள்ளலாமா? என்று பணிவுடன் கேட்டான். அதற்கு சுதாமர் "ஒன்றும் இல்லை! இந்த அறையில் மன்னரின் கையகலத் திருவுருவப்படம் ஒன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. ஆனால் அது இப்போது காணவில்லை. அது எப்படிக் காணாமல் போயிற்று என்று உங்களுக்குத் தெரியுமா என்றார்? உடனே அனந்தனுக்கும் அதைப் பற்றி ஞாபகம் வந்தது. ஆனால் அது காணாமற் போனது மந்திரி சொன்ன பின்பு தான் அவனுக்கே தெரியும்.




ஆமாம்! ஆமாம்! அந்தப் படம் நானும் பார்த்துள்ளேன். ஆனால்...ஆனால்.... அது எப்படி மாயமாய் மறைந்தது என்று தெரியவில்லை என்று குழப்பத்துடன் கைகளைப் பிசைந்த அனந்தன் இந்த அறைக்கு எத்தனையோ பேர் வருகிறார்கள், போகிறார்கள்! அவர்களில் யாரோ ஒருவன் தான் மன்னரின் ஓவியத்தைத் திருடியிருக்கவேண்டும்! சுத்தத் திருட்டுப்பயல்கள்! தவிர, இங்கு காவல் காப்பவர்களும் சரியில்லை! என்று விளக்கம் அளித்தான்.

மன்னருக்கு அவனுடைய பதில் வியப்பளித்தது. ஆனால் மந்திரி [illegible] தலையசைத்து விட்டு நீ சொன்னபடி செய்வோம். திருட்டுப் போன ஓவியத்திற்குப் பதிலாக வேறு ஒன்றை வைத்துவிடலாம் என்று சொல்லிவிட்டு மன்னருடன் சுமுகனுடைய அறைக்குச்சென்றார்.

சுமுகனுடன் சற்றுநேரம் பொதுவாகப் பேசிக்கொண்டிருந்த பின் மந்திரி இந்த அறையிலிருந்த மன்னரின் ஓவியம் எங்கே? என்று கேட்டார். என்ன ஆச்சரியம்? அந்த அறையிலும் ஏற்கனவே இருந்த ஓவியம் காணாமற் போயிருந்தது. அதை அப்போதுதான் கவனித்த சுமுகன் பலத்த அதிர்ச்சியுற்றான். தன்னுடைய கவனக்குறைவினால் நேர்ந்துவிட்டது என்று மன்னர் நினைப்பாரோ என்று அவமானத்தால் குறுகிப் போனான்.

அதற்குள் சுதாமர் என்ன? அது எப்படிக் காணாமற் போயிற்று என்று உனக்கும் தெரியாதா? போனால் போகிறது! யாரோ அதைத் திருடியிருக்கிறார்கள். அதைக்கூட காவல்வீரர்கள் கவனிக்கவில்லை. இவர்களை தண்டிக்கவேண்டும் என்றார். உடனே தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட சுமுகன் மந்திரியாரே! மன்னருடைய ஓவியம் திருடப்பட்டது என்று சொல்லாதீர்கள். நம் மன்னரை குடிமக்கள் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். அத்தகைய நடமாடும் தெய்வத்தின் உருவப்படம் கிடைத்தால் யார்தான் அதை எடுத்துக் கொள்ள ஆசைப்பட மாட்டார்கள்! அதனால் அது காவல்வீரர்களின் தவறல்ல! நமது மன்னரின் உருவப்பட த்தை இனியாவது மிகவும் எச்சரிக்கையாகக் கடுங் காவலில் வைக்க வேண்டும் என்றான். அவன் சொன்னதைக் கேட்டு மன்னரின் முகம் பெரு மிதத்தில் மலர்ந்ததை மந்திரி சுதாமர் கவனிக்கத் தவறவில்லை. சற்று நேரங்கழித்து சுமுகனும் அனந்தனும் மன்னரின் முன் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் முன் சுமுகன் தூதனாகத் தேர்வு செய்யப்பட்டதை சுதாமர் அதிகார பூர்வமாக அறிவித்தார். பின்பு அதற்கான விளக்கத்தையும் அளித்தார்.

இவருடைய அறைகளில் வைக்கப்பட்டிருந்த மன்னரின் ஓவியங்களை அவர்கள் அறியாமல் சுதாமர்தான் ஆட்கள் மூலம் அப்புறப்படுத்தினார். ஓவியம் காணாமற் போனதற்கான விளக்கத்தை அவர்கள் இருவரும் எவ்வாறு தங்கள் வாய்மொழியாக விபரிக்கிறார்கள் என்று சோதிப்பதே சுதாமரின் நோக்கம்! அனந்தன் அது திருட்டுப் போயிருக்கும் என்று ஊகம் செய்தவன் பழியைக் காவலர்கள் மீது சுமத்தினான். ஆனால் சுமுகனோ யாரையும் எந்தக் குறையும் சொல்லாமல் சாமர்த்தியமாக மன்னர் மனம் மகிழும்படி விளக்கமும் அளித்தான். ஒருதூதன் மிக சிக்கலான சூழ்நிலையிலும் யார் மீதும் பழி சொல்லாமல் மிக சாமர்த்தியமாகப் பேசி நிலைமையைச்சமாளிக்க வேண்டும். அத்தகைய வாக்கு சாதுரியம் உள்ள சுமுகன்தான் தூதனாகத் தகுதியானவன் என்றும் விளக்கினார். அதுகேட்டு, தனது போட்டியாளன் என்றும் பாராமல் அனந்தன் சுமுகனைக் கட்டித் தழுவிப் பாராட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 30 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



இப்பத் தொழில் வித்தையக் காமிக்க ஆரம்பிக்கிறான் சுப்பு.

ஆட்டு முதுகெலும்பைத் தடவிக்கிட்டே வந்து சுருக்குன்னு குறுக்கப் புடிச்சு ஒரு அமுக்கு அமுக்குனான். உள்ளங்கையி சொல்லிருச்சு ஆடு என்ன எடைன்னு. அப்பிடியே கையக் கீழ எறக்கிப் பின்னங்கால் சப்பைய ஒரு புடி புடிச்சான். கொழுப்பு சேந்தும் சேராம இருக்கு குட்டி.

ஒரு கையில கழுத்தப் புடிச்சு, மறுகையில கழுத்தத் தடவுற மாதிரி தடவிக் கட்டைவிரலையும் ஆள் காட்டி விரலையும் சங்குல வச்சு ஒரு அழுத்து அழுத்தவும் இருமிச் செருமிருச்சு ஆடு.

அகத்திக்குழையோட சளித்துண்டு ஒண்ணு கொத்துன்னு வெளியேறிப் பொத்துன்னு விழுகுது.

ஒம்போது கிலோ; கொழுப்புப் பசையுள்ள ஆடு; எளங்கறி.

எல்லாம் தெரிஞ்சு போச்சு சுப்புக்கு.

எந்த ஆட்டையும் சங்கப் புடிச்சா செருமி இருமித் துப்பத்தான் செய்யும். அந்த நாடகத்தையும் நடத்திக் காமிச்சுட்டான்.

"யண்ணே கருத்தமாயண்ணே! குட்டி எளங்குட்டி; கொழுப்பு சேரல. ஏழெட்டுக் கிலோ வந்தாப் பெருசு. அதுவுமில்லாம இருமுது ஆடு. சீக்கு வந்த மந்தையில சிக்கியிருக்கும் போலிருக்கு. போங்க... போயி வேலையப் பாருங்க. வித்து வச்சிருக்கேன்; வந்து வாங்கிட்டுப் போங்க."

அவன் பசப்பு- பம்மாத்து- வித்தை- வினயம் எல்லாத்தையும் வேடிக்கை பாத்துக்கிட்டேயிருந்தாரு கருத்தமாயி.

'சரி ஆனது ஆகட்டும். இவன் அடிக்கிற காசு இவன் எழவுக்கு நான் இப்பவே செய்யிற மொய்யா இருக்கட்டும்."

புறப்பட்டாரு.

கடைசியா ஒரு பார்வை பாத்தாரு வீட்டு வெள்ளாட்டை. அது அவரைப் பாத்துச்சு ஒரு பார்வை.

"எழவுக்குப் போறவரே! உங்க விட்டுல இருந்து யாரு வருவாக என் எழவுக்கு?"

துட்டுச் சேக்கிறதவிடச் சள்ளை புடிச்சது எழவுக்கு செட்டு சேக்கிறது.

இந்தா இந்தான்னு இழுத்துப் பறிச்சு சொந்தபந்தங்க ஒருமணி வாக்குல ஒண்ணு சேருதுங்க.

பெரிய கருப்பு, மண்டையன், செவத்தராமன், ஒத்த வீட்டு மூளி, சின்ன இருளாயி, செவனம்மா, மாங்காயன், ஒத்தக்கண்ணு மணி, கருவாட்டு முத்தம்மா எல்லாரையும் ஒண்ணு சொன்னாப்புல கூட்டிட்டாரு.

தோட்டத்துல இருந்து சிட்டம்மா வத்தலக்குண்டுக்கு நேரவரச் சொல்லிச் சவுளி எடுத்தாக. உத்தப்பநாயக்கனூர்ல எறங்கி, பஸ் மாறி வந்துட்டாக கல்லூத்துக்கு.

ஆம்பளைக பின்னப்போக, நெறை மரக்காவும் சீலையும் சுமந்து பொம்பளைக முன்னப்போக, பொம்பளைகளுக்கும் முன்னப் போறாக கொம்பு ஊதுற இரண்டுபேரு.

வித்தை எல்லாம் இந்த ஊர்லேயே வித்துறணும்னு முடிவு பண்ணிட்டாக ரெண்டுபேரும். தம் புடிச்சு அந்த ஊது ஊதுறாணுக. கீழியிது காது கேக்கிற ஆளுகளுக்கு.

நல்லவேளை வெள்ளச்சாமி செத்தே போனாரு; இல்லேன்னா கேட்டுச் செத்திருப்பாரு.

"வந்துட்டாகய்யா சம்பந்தக்காரக" கல்லூத்தே வேடிக்கை பாக்குது.

இந்தக் கூட்டத்தை ஒதுங்கச் சொல்லிக் கடந்து போகுது தக்காளிப்பழ நெறத்துல காரு ஒண்ணு. போறாக காஞ்சுபோன சாதிசனத்துக்குக் காப்பித் தண்ணி வாங்கித் தாராரு கருத்தமாயி.

"மிச்சரா? பக்காவடையா? வேணுங்கறத வாங்கித் தின்னுங்கப்பா"

சிட்டம்மாவுக்குப் பொறுக்கல. கருத்தமாயி ஆடப்பரம் பண்றதா அவ அடி மனசு சொல்லுது.

"ஏண்டி... செவனம்மா! எங்க வீட்டு ஆளு இந்த மின்னு மின்னுது. எனக்குத் தெரியாம எங்கேயோ வச்சு எடுத்துச் செலவழிக்குது இந்தாளு"


"எடுத்து எங்க செலவு பண்றது? இருக்கிறத வித்துத்தான செலவு பண்ணுனேன் செவனம்மா"

"விட்டாப் பொண்டு புள்ளைகளக் கூட வித்துச் செலவு பண்ணிரும் இந்தாளு"

"விக்கலாம்- எவன் வாங்குவான்?" சலிச்சுக் கோவிச்சுக்கிட்டாரு கருத்தமாயி.

முத்துமணியும் அவன் பொண்டாட்டியும், செத்த வீடு விசாரிக்கவா போகுதுக? செவப்புக் காரைக் காமிக்கணுமேங்கிற பகுமானம்.

ஆத்தாளக் கட்டிப் புடிச்சு மக அழுக. மகளக் கட்டிப் புடுச்சு ஆத்தா அழுக, சக்தியெல்லாம் திரட்டி ஆன மட்டும் 'தம்' கட்டி அழுது பாத்தும்



கண்ணீர் வரல ரெண்டு பேருக்கும்.

மழைக் கோப்பா இருந்துச்சு. நாலு மணிக்கே கட்டித் தூக்கிட்டாக பாடைய; எடுக்கப்போற நேரத்துக்குச் சின்னப்பாண்டியும் வந்து சேந்துட்டான்.

சுடுகாட்டுல இருந்து திரும்புனாக. சொட்டையில்லாத எல்லாரும் கால்ல தண்ணி ஊத்திக் கழுவுனாக.

"ஒம்பதாம் நாளு உருமாக்கட்டு"

கெடு குறிச்சுக் கிளம்பிருச்சு வந்த கூட்டம்.

•••••

கல்லூத்துல [illegible] நாயக்கனூர்ல [illegible]

காஞ்சுபோன தொண்டைக்குக் காப்பித் தண்ணி ஊத்தி நனைக்கிறப்ப வெள்ளாட்டு ஞாபகம் வந்துருச்சு சிட்டம்மாவுக்கு.

"விடியக் கருக்கல்ல தண்ணிவச்சது, பாவம் கொலப்பட்டினியா எரையில்லாமக் கெடக்கும் என் ஆடு. போறபோதே ஆமணக்கங்குழை ஒடிச்சுக்கிட்டுப் போகணும் செவனம்மா"

"எரையான கழுதைக்கு எரை எதுக்கு? வெள்ளாட்ட வெட்டி வித்துட்டுத்தான எழவு வீட்டுக்கே வந்திருக்கோம்"

"யாத்தே என் வெள்ளாடு போச்சே"

காப்பி கிளாசைத் தரையில வீசிச் செதறு தேங்கா போட்டு, வீச்சுன்னு கத்தி அழுது அமளிதுமளி பண்றா சிட்டம்மா.

எழவு வீட்டுல வராத கண்ணீரு, கொட்டுது கொடம் கொடமா.

[illegible] வெள்ளச்சாமிக்கு அழு[illegible] அது பொய்யி; இப்ப வெள்ளாட்டுக்கு அழுகிறா பாருங்க... இது தான் மெய்யி.

## "யாத்தே என் வெள்ளாடு போச்சே;" எழவு வீட்டுல வராத கண்ணீரு, கொட்டுது கொடம் கொடமா...

> **நிமிஷங்கள்**
>
> இதயத்தில்
> என்னென்ன வேட்கை,
> இது இடைவேளை
> இல்லாத வாழ்க்கை!
> வாழ்வோடு
> போராட்டம் இங்கே,
> இதில் வாழ்கின்ற
> நிமிஷங்கள் எங்கே?
>
> -வைரமுத்து-

•••••

புத்த கயை-

மௌனத்தை உடுத்திருந்தது.

போதி மரத்தடியில் கண்மூடித் தியானிப்பவர்களோடு அந்த மௌனம் அவரவர் தாய்மொழியில் பேசிக் கொண்டிருந்தது.

கண்மூடிக் கொண்டும் காணக் கடவது மௌனத்தின் அழகு ஒன்று தான். மௌனம்தான் பிரபஞ்சத்தின் ஆடை; சப்தம் குகிலுரிப்பு.

இதோ-

இதற்குத்தான்-

இந்தக் கணத்திற்காகத்தான்-

என் தாய்-தந்தையரின் நிறைவேறாத கடைசி ஆசைக்காகத்தான் இந்தியா வந்தேன்.

பத்மாசனமிட்டு விழிமூடி அமர்ந்திருந்த இஷிமுராவின் முகத்துக்கு மூன்று சென்ட்டிமீட்டர் தூரத்தில் தாய்-தந்தையரின் முகபிம்பங்கள் ஒன்றுகூடி ஒன்றுகூடி உடைந்தன; உடைந்துடைந்து ஒன்றுகூடின.

சற்றுநேரத்தில் கற்பனையின் ஆகர்ஷண எல்லைக்கு அகப்படாமல் சென்று தேய்ந்து இற்றுப்போன தாய்-தந்தையரின் பிம்பங்கள் போயொழிந்து போயொழிந்து புத்தரில் முடிந்தன. உரிமையுள்ள விருந்தாளியைப் போலச் சொல்லாமல் வந்தது கண்ணீர்.

சென்டாய் நகரில் மரணம் பார்த்த போது எனக்கு அழுகை வந்தது; கண்ணீர் வரவில்லை. அங்கு அழுகை வரவில்லை; ஆனால் கண்ணீர் வருகிறதே...!

இன்று இந்த போதிமரத்தடியில் ஆங்காங்கே தியானமியற்றும் மனிதக் கூட்டம் சிந்தும் கண்ணீரருவியெல்லாம் ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் நீ அழுத கண்ணீரின் தொடர்ச்சியா தூயவ?

உடலை உரித்தெறிந்துவிட்டு, மனசு என்ற அருவம் மட்டுமே மண்டியிட்டிருப்பதான மாயம் நிகழ்ந்தது இஷிமுராவுக்கு.

கூச்சலிட்டுக் கூச்சலிட்டுத் தம் கூரிய அலகுகளால் மௌனத்தைக் கத்தரித்துக் கொண்டிருந்தன பறவைகள்.

ஆகா... பறவைகளின் சப்தம்கூட மௌனத்தைச் செழுமை செய்யும் எதிர்வினையோ...?

காற்றுக்கு அரசிலைகளின் மொழி புரியாமலும் அரசிலைகளுக்குக் காற்றின் மொழி புரியாமலும் தொடர்ந்து கொண்டேயிருந்தது உச்சத்தில் அந்த யுகசம்பாஷணை.

இஷிமுரா உடம்பெங்கும் ஒரு பரவச நதி பாய்ந்து சென்று நரம்புகளின் முடிவில் குமிழ்களாய் உடைந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொதுத்துறை உத்தியோகத்தர்கள்

# சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்-லலித்



(கொழும்பு)

பொதுத்துறை உத்தியோகத்தர்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிப்படைத்தன்மையை பேணிப் பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சகல அமைச்சுக்களினதும் சிரேஷ்ட அதிகாரிகள் சொத்து விபரங்களை வெளியிடுமாறு கோரியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக குறித்த சொத்து விபரங்களை வெளியிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பாக அமைச்சுக்களின் செயலாளர்கள் குறித்த தகவல்களை வெளியிட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பல்வேறு தேவைகளுடன் மு/பாரதி வித்தியாலயம்

(றெட்பானா)

புதுக்குடியிருப்புகல்வி வலயத்திற்கு உட்பட்ட வள்ளுவர்புரம் மு/பாரதி வித்தியாலயம் வளப்பற்றக்குறையுடன் இயங்கி வருவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யுத்தத்தின் பின்னர் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்களை தாண்டியும் யுத்த அழிவுகளையும் பாடசாலை இழந்த வளங்களையும் இன்னும் பெற்றுக் கொள்ளப்படாத பாடசாலையாகவே காட்சியளிக்கின்றன.

தரம் 1 தொடக்கம் தரம் 12 வரையான வகுப்புக்களை கொண்ட இப்பாடசாலைக்கு பல தேவைகள் காணப்படுகின்றது.

நூலக வசதியின்மை, ஆய்வுகூட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை, போதிய இடவசதியின்மை போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

இடவசதியின்மையால் பெரும்பாலான வகுப்புக்கள் மாமர நிழல்களின் கீழ் பல சிரமத்தின் மத்தியில் நடைபெற்று வருகின்றது. சிறப்பான ஆய்வு கூடம் இன்மையால் விஞ்ஞானபாட ரீதியாக மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

அத்துடன் நூலகம் இன்மையால் மாணவர்கள் தேடல் ரீதியான கல்வியை பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

# சவுதிக்கான இலங்கை தூதுவர் நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் அஹமட் ஏ ஜவாட் பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பியுள்ளார்.

சவுதி அரேபியாவிலிருந்து ஜவாட் இலங்கை நோக்கிப் புறப்பட்டதாக நேற்று முன்தினம் தெரிவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவிற்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இவருக்கு மூன்றாண்டு பதவிக்காலம் கடந்த டிசெம்பர் மாதத்துடன் நிறைவடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பதவிக்காலம் முடிந்து நாடு திரும்புவதாக தூதுவர் ஜவாட் அந்நாட்டு வெளிவிவகார பிரதி அமைச்சர் அப்துல் ஹெடின் அஸ்காரியிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஜவாட்டின் பதவிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள முக்கிய பங்களிப்பை வழங்கியதாக சவுதி அரேபிய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக் அண்மையில் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவரை வாபஸ் பெற்றுக் கொள்வதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தூதுவர் ஜவாட் பதவிக்காலம் முடிவடைந்தே இலங்கை திரும்பியுள்ளதாக சவுதி அரேபிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் பாடுவதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையில் சகோதரத்துவம் மலரும். கனடா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பல மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுகிறன்றது.

தேசிய இனப்பிரச்சினை ஏற்படுவதற்கான முக்கிய பிரச்சினைகளில் மொழிப்பிரச்சினையும் ஒன்றாகும். நாட்டு மக்களிடையே நிலவிவரும் வகுப்புவாத இடைவெளியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சகல இன மக்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமானது.

தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் இசைக்கப்பட வேண்டும் என்ற யோசனைக்கு பௌத்த பிக்குகளில் ஒரு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தப் பிரச்சினைக்குக்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. தனி இராச்சியம், தனித் தேசிய கீதம் என அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை.

எந்தவொரு தரப்பினரும் கடும் போக்குடன் செயற்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (அ-2)

# காட்டுவாசிகளின் மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்க நேரிடும்

## எல்லாவல தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் காட்டுவாசிகளின் மொழியிலும் தேசிய கீதம் பாட நேரிடும் என எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

நினைத்த மாதிரி தேசிய கீதத்தில் புதிய மொழிகளை இணைக்கக்கூடாது. தேசிய கீதத்தில் தமிழ் மொழியை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டாலும் ஒரே மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்றது. எந்தவொரு நாட்டிலும் தேசிய கீதம் பிரதான மொழியில் பாடப்படுவது வழமையாகும்.

பல இன மக்கள் வாழ்கின்றார்கள் என்பதற்காக தேசிய கீதத்தை பல மொழிகளில் பாடினால் அது குழப்பமாகிவிடும். தமிழ் மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கவில்லை.

இவ்வாறு தமிழ்மொழியில் தேசிய கீதத்தில் இணைக்கப்பட்டால் எதிர்காலத்தில் காட்டு மொழிகளையும் இணைக்க நேரிடும்.

வடக்கு கிழக்கில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் சிங்கள மொழி இணைக்கப்பட வேண்டும் என்றார்.

ஆயினும் கனடா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பல மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதாக அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கட்டண மாற்றத்திற்கு பதில் டீசல் நிவாரணம் வேண்டும்

## த.பே.உரிமையாளர் சங்கம்

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ள பேருந்து கட்டண மாற்றத்திற்கு பதிலாக டீசல் நிவாரணம் வழங்குமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த கோரிக்கை அடங்கிய கடிதம் நேற்று முன்தினம் போக்குவரத்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் டீசல் நிவாரணம் அன்றி பேருந்து கட்டண உயர்வே வேண்டும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்தார். (அ-2)


# 9 பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளாக பணிபுரியும் ஒன்பது பேர் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் குறித்த பதவி உயர்வு தகவலை பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் உறுதி செய்துள்ளார்.

அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (அ-2)





நவாலி களை ஓடை நாகலிங்கேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கும்பவீதிப் பிரதட்ஷணம் நடைபெறுதையும் கும்பாபிஷேக நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஓய்வுபெற்ற அதிபர் எம்.திருஞானசம்பந்தருக்கு எஸ்.திருஞானசம்பந்தர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திற்கு உதவிய அவுஸ்திரேலியா தமிழர் சுதந்திரத்திற்கும் உதவ வேண்டும்

## சிறிதரன் எம்.பி. ஆஸி.குழுவிடம் கோரிக்கை

யுத்தத்திற்கு உதவிய அவுஸ்திரேலியா உட்பட சர்வதேச நாடுகள் சுதந்திரமானதும் கௌரவமானதுமான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சமகால நிலைமைகள் குறித்து சிறிதரன் எம்.பி அவுஸ்திரேலிய நாட்டின் பிரதான எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் தலைமையிலான குழுவினருக்கு எடுத்துரைத்தார்.

அவுஸ்திரேலிய குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து கிறிதரன் எம்.பியை அவரது அறிவகம் அலுவலகத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது கருத்து தெரிவித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் யுத்தத்தின் பின்னரும் இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்ற நிலைமை, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தியமை போன்றன தொடர்பில் சுட்டிக் காட்டியிருந்தார்.

மேலும் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினரின் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கை மற்றும் அவதூறு குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆதாரங்களை பாராளுமன்ற உறுப்பினர் வழங்கியதுடன் அது தொடர்பில் நடந்தவற்றையும் கூறியிருந்தார்.

இதேபோல் கடல் கடந்து தமிழர்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கான காரணம் இங்கு நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியாமையே என சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் யுத்தம் நிறைவடைந்து 3 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவற்கான எந்த சமிக்ஞையும் காண்பிக்கப்படவில்லை எனவும் மாறாக தமிழ் இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களும் புனர்வாழ்வுக்கு அனுப்பும் சம்பவங்களுமே இடம்பெறுவதாக சுட்டிக்காட்டினார்.

இதனோடு வடக்கில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் தொகைக்கும் அதிகமாகவே படையினர் நிலைகொண்டிருப்பதையும் தரவுகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் வெளிப்படுத்தியதுடன் யுத்தத்திற்கு உதவிய அவுஸ்திரேலியா உட்பட சர்வதேச நாடுகள் தமிழர்களுக்கு சுதந்திரமானதும் கௌரவமானதுமான தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுக்கவும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த குழுவினர் இந்த விடயம் குறித்து தாம் கவனத்தில் எடுப்பதாகவும் தாம் இது குறித்து ஏற்கனவே அறிந்திருப்பதாகவும் கூறியுள்ளார். (அ-2)

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மருக்காரம்பளை கிராமத்தில் முச்சக்கரவண்டி சாரதியொருவரின் சடலம் நேற்று வவுனியா பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து ஈச்சங்குளம் செல்லும் பிரதான வீதியில் மருக்காரம்பளை கிராமத்தில் முச்சக்கரவண்டிக்கு அருகிலிருந்து அதன் சாரதியான தரணிக்குளத்தினை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சதாசிவம் குகானந்தன் (வயது 42) என்பவரது சடலத்தினை நேற்று அதிகாலை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

எனினும் இம்மரணம் எவ்வாறு இடம் பெற்றது என தெரியாது என தெரிவித்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-266)

# இந்திய கடல் எல்லைக்குள் வந்து இலங்கை கடற்படை தாக்குகிறது

## தமிழக மீனவர்கள் மீண்டும் முறைப்பாடு

கச்சதீவு அருகே மீன்பிடித்த தமிழக மீனவர்கள் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளதாக மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

தொண்டி அருகே நம்புதாளை மீனவர்கள் தொண்டி கடலில் மீன்பாடு குறைவாக இருப்பதால் நேற்றுமுன்தினம் மூன்று மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர்.

மூன்று நாட்களுக்கு முன்பு இப்பகுதி மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி வலையை சேதப்படுத்தி மீன்களை கடலில் வீசினர்.

இது குறித்து மீனவர்கள் கூறியதாவது,

இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை கடற்படையினர் அத்துமீறி நுழைந்து அடாவடி செயலில் ஈடுபடுகின்றனர். நாங்கள் பிடிக்கும் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மீன்கள் கடலில் வீசி நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

டீசல் செலவும் வீணாகி வெறுங்கையுடன் திரும்புவதால் குடும்பம் நடத்த மேலும் கடன் வாங்கி தத்தளித்து வருகிறோம். இலங்கை கடற்படையினர் தாக்குவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (அ-2)

# விஸ்வரூபம் திரைப்படத்தை முற்றாக தடைசெய்ய வேண்டும்

## இலங்கை தவஹீத் ஜமாஅத் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

கமலஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்தினை முற்றாக தடை செய்ய வேண்டும் என இலங்கை திரைப்பட கூட்டுத்தாபனத்தில் படத்தினை பார்த்த இலங்கை தவஹீத் ஜமாஅத் தீர்க்கமாக முடிவு செய்துள்ளதாக அவ்வமைப்பின் துணைச்செயலாளர் ரஸ்மின் தெரிவித்தார்.

தற்போது பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள விஸ்வரூபம் படத்திற்கு இலங்கையில் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் தவஹீத் அமைப்பினர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் முஸ்லிம் புத்திஜீவிகள் போன்றோருக்கு இலங்கை திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தணிக்கை குழுவினருடன் காண்பிக்கப்பட்டதனையடுத்தே மேற்கண்டவாறு ரஸ்மின் மௌலவி தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், படம் முழுமையாக முஸ்லிம்களை தீவிரவாதிகளாக காட்டியதோடு தீவிரவாதிகளை வழி நடத்தும் ஒரு வழிகாட்டி நூலாக குர்ஆனையும் காட்டியுள்ளார் கமல். எனவே நிச்சயமாக இப்படம் தடை செய்யப்பட வேண்டியதொன்றே.

தற்போது பட்த்திலிருந்து சில காட்சிகளை நீக்கிவிட்டு படத்தினை வெளியிட தணிக்கை குழு முயற்சிக்கிறது. ஆனால் இப்படத்தின் அனைத்து காட்சிகளும் இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் தவாறன முறையிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளதனால் இப்படத்தினை முற்றாக தடை செய்வதே சரியானது என எங்கள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

எனவே இன்ஷா அல்லா இப்படத்தினை வெளியிடாமல் தடுப்பதற்கு நாங்கள் முழு முயற்சி எடுப்போம் என்றார்.

இதேவேளை, இலங்கையில் வெளியாகும் திரைப்படங்களுக்கு அனுமதி வழங்கும் தணிக்கை சபை தலைவர் காமினி சுமனசேகர கருத்து தெரிவிக்கையில்,

விஸ்வரூபம் திரைப்படம் எந்தவொரு மதத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் இல்லையென தாங்கள் கருதுவதாகவும் சில காட்சிகளை மட்டும் நீக்கிவிட்டு விரைவில் இப்படத்தினை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# போதைப்பொருள் ஒழிப்பிற்கு முன்னுரிமை - பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

போதைப் பொருள் ஒழிப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

கொச்சிகடே பிரதேசத்தில் பொலிஸ் நிலையமொன்றை திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிப்பதே பொலிஸாரின் முதன்மைக் கடமையாகுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபர்களை 48 மணித்தியாலயங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யும் புதிய சட்டத்தைப் பயன்படுத்தி விசாரணைகளை துரிதப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)



# திருமலையில் தலையெடுக்கிறது டெங்குக்காய்ச்சல் - 8 பேர்பலி;

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குநோய் வேகமாக பரவி வருவதுடன் இந்நோய்த்தாக்கத்திற்கு 8 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 13 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை நகரில் அருணகிரி கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு வேகமாகப் பரவி வருவதாக திருகோணமலை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன் மங்கல விளங்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர் ஆகியோர் நிற்பதையும் தரம் ஒன்று மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத் தேர்தலை இலக்குவைத்து வடக்கில் சிங்களக் குடியேற்றம்..!

அதிதீவிரம் காட்டுகிறது இலங்கை அரசு, வடமாகாணத்தில் ஒரு சிங்களத் தொகுதியையா வது ஏற்படுத்த வேண்டும் என்பதில். இந்தவிடயத்தில் அது மிகப்பொறுப்புடன் நடந்துகொள்கிறது.

சிங்கள மக்களை அங்கு குடியேற்றி தமிழரின் இருப்பை கேள்விக்குறியாக்குவதுடன் மாகாண சபையிலும் சிங்களப் பிரதிநித்துவம் பெறப்படவேண்டும் என்பதில் அதிதீவிரம் காட்டப்படுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் சிங்கள இராணுவம் ஆட்சி செய்கின்றது.

திட்டமிட்ட அடிப்படையில் மிக ஆழமாக சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகின்றது. அந்தக் குடியேற்ற இலக்கு நிறைவாகும் வரை வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறாது. தமிழீழ விடுதலைப்புலிகள் எப்படி ஆட்சி செய்தார்களோ அதேபோன்று சிங்கள மக்களை வன்னியில் குடியேற்றி ஆட்சி செய்ய வேண்டும் என நினைக்கின்றது இராணுவம்.

கானமயிலாட கண்டிருந்த வான் கோழியும்... என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

வவுனியா தெற்கு சிங்களப் பிரிவை



ஏற்கனவே ஏற்படுத்தி இருந்த அரசு அப்பிரிவில் 2ஆயிரம் ஏக்கர் காணியை துப்பரவு செய்து அங்கு சிங்களவர்களை குடியேற்றி வருகின்றது. ஒரு சிங்களவருக்கு ஒரு ஏக்கர்வீதம் அந்தக் காணிகள் பங்கிடப் பட்டுள்ளன.

அவர்கள் அங்கு விவசாயம் செய்வதற்கு உதவியாக 10 மில்லியன் ரூபாவை விவசாய அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் மிகப்பரந்தளவிலான ஆயிரக் கணக்கான அரச காணிகள் வெறுமனே கிடக்கின்றன.

வவுனியாவில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு தென்னிலங்கை தானே பூர்வீக வாழ்விடம். அவர்களை அங்கே இதே வளத்துடன் குடியமர்த்தினால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் அல்லாவா? ஆனால், அதனை விடுத்து எவ்வித தொடர்பும் அற்ற பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் மாத்திரம் வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அவர்களை குடியமர்த்த ஏன் அரசாங்கமே தமது வளங்களை பயன்படுத்த வேண்டும்.

1949 ஆம் ஆண்டு 140 சிங்களவர்களை மாத்திரம் கொண்டிருந்த திருகோணமலை மாவட்டத்தில் இன்று இரண்டு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் அளவுக்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியது யார்? இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதிலாக ஒரு முறை அதிலும் விருப்பு வாக்குகளை மாத்திரமே பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக வரும் அளவுக்கு தமிழரின் எண்ணிக்கையை அங்கு குறைத்தது யார்?

திட்டமிட்டு சிங்கள அரசுகள் செய்த சூழ்ச்சிகளினால் இவை ஏற்பட்டன என்பது பகிரங்கமான உண்மை. வன்னியிலும் இந்தநிலையை ஏற்படுத்த மகிந்த ரஜபக்ச அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. 2000 சிங்களக் குடும்பங்களைக் கொண்ட ஒரு குடியேற்றத்தை வவுனியாவில் ஏற்படுத்துவதில் இந்த அரசு தீவிரமாகச் செயயற்பட்டுவருகின்றது.

ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் மீள் குடியேற்றம் என்ற பெயரில் அனாதைகளாக சிறிய கூடாரங்களில்வாழ -சிங்கள அரசு நிர்ப்பந்தித்துள்ளதாக- கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கு உதவ அரசாங்கம் முன்வராத ஆதேவேளையில், வேறு பொது நிறுவனங்களையும் உதவி செய்யவிடாமல் தடுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**மன்னாரில் ஆயிரம் ஏக்கர் தமிழர் காணியை அமைச்சர்ரிச்சாட் அபகரிப்பு!**

இதேவேளையில் வன்னியிலுள்ள தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் துன்பங்களைக் கொடுத்துவரும் அமைச்சர் ரிச்சாட் பதுர்தீன் இப்போது தமிழருக்கு சொந்தமான நில அபகரிப்பிலும் ஈடுபட்டு வருகின்றார். தலைமன்னார் பழைய பாலத்தடியைச் சுற்றியுள்ள ஆயிரம் ஏக்கர் தமிழருக்குச் சொந்தமான நிலத்தை போலி ஆவணங்களைத் தயாரித்து தம் வசப்படுத்தியுள்ளார்.

திடீரென தனது காணிகளைச் சுற்றி வேலி கட்டப்படுவதை அறிந்து காணி உரிமையாளர்கள் அங்கு சென்றபோது அமைச்சரின் சகோதரர்கள் அவை தமக்குச் சொந்தமானவை என போலி ஆவணங்களை காட்டியுள்ளனர். அதுமட்டுமல்ல காணிகளிலுள்ள பனைமரங்களைத் தறித்து கூடிய விலைக்கு கொழும்பு வியாபாரிகளுக்கும் விற்பனை செய்துவருகிறார். இதுகுறித்து சட்ட நடவடிக்கை எடுக்க அவர்கள் ஆலோசிக்கின்ற போதும் நீதிமன்றமே அரசின் வசம் இருப்பதால் வழக்குத் தாக்கல் செய்தால் நீதி கிடைக்குமா எனச் சந்தேகிக்கின்றனர்.

இந்தியா, இலங்கையின் அயல்நாடு மாத்திரமல்ல வரலாற்றுக்காலம் தொட்டு மிகநெருக்கமான தொடர்புகளைக் கொண்ட நாடு. இலங்கையை ஆண்ட மன்னர்கள் அனைவரும்- இறுதி மன்னன் விக்கிரமராஜசிங்கன் வரை தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என இந்திய சரித்திர வரலாறுகள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டு, வெளிநாட்டு சர்வதேச அரசியலைப் பொறுத்தவரை இலங்கை எப்போதுமே இந்தியாவுடன் நட்பைப் பேணவேண்டும் என்பது ஒரு கட்டுப்பாடு அல்ல கடப்பாடு என்றே குறிப்பிடவேண்டும். அந்த அளவிற்கு சகோதர உறவு கொண்ட நாடு.

இலங்கை தொடர்பான ஒரு முடிவு எடுப்பதற்கு முன்பு உலக நாடுகள் இந்தியாவின் அபிப்பிராயத்திற்கு முன்னுரிமை கொடுப்பது வழமை. அதன் அடிப்படை நோக்கமும் அவ்விரு நாடுகளின் தொடர்பை சரிவர புரிந்து கொண்டதனால்தான் என்பதும் தெளிவு.

ஐ.நா.மனித உரிமை பேரவை மகாநாடு மாத்திரமல்ல, ஐ.நா. பாதுகாப்புச் சபையும் இலங்கைக்கு எதராக முடிவை எடுக்குமுன்பதாக இந்தியாவின் ஆதரவை பெற்றேயாக வேண்டும். இதனை இலங்கை அரசியல் தலைவர்கள் மிக நன்கறிவார்கள். கடந்த ஆண்டு மார்ச்மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் கடுமையாக இருந்தது என்று இந்தியா அதில் தலையிட்டு, கடுமையான வாசகங்களை அகற்றி மிகக் குறைந்தளவு அழுத்தங்ளைக் கொண்ட தீர்மானமாக மாற்றியது. ஆனால், அவ்வறிக்கையில் கூறப்பட்டவற்றைக்கூட இலங்கை அரசு இதுவரை நிறை வேற்றவில்லையென வெளிநாடுகள்பல தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மகாநாட்டின்போது இலங்கைக்கு எதிராக மிகக் கடுமையான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாக அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதனால், இலங்கை அரசின் முதல் அரசியல் வியூகமாக இந்தியாவுடனான நல்லுறவை வலுப்படுத்தும் முயற்சி ஒன்று இவ்வார முற்பகுதியில் மேற்கொள்ளப் பட்டது.

அதன்போது வர்த்தக ஒப்பந்தம், பயங்கரவாத-போதை மருந்து கடத்தல் தடுப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டபோதும் இலங்கை அரசுக்கெதிராகவோ, அன்றி அழுத்தம் கொடுக்கும் விதமாகவோ இந்தியா வாக்குறுதிகள் எதனையும் கோரவில்லை ஆனால், இந்தியா வெளியுறவுத்துறை அமைச்சர் ஊடகவியலர்களுக்கு வழங்கிய செவ்வியில் வழக்கமாக தெரிவுக்கும் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

**தமிழர்களின் சுயகௌரவமான வாழ்வுக்கு இலங்கை உறுதியளிக்கவேண்டும் என்றும், நிரந்தர தீர்வு அரசினால் கொண்டுவரப்படவேண்டும் என்றும், மீள்குடியேற்றம் தமிழர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் இடம்பெறவேண்டும் என்றும் அவர் கூறினார்.** போர் முடிந்த காலப் பகுதியிலிருந்தே இந்தியா இதனையே கூறி வருகின்றது. ஆனால், எவ்வித முன்னேற்றமும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் இடம் பெறவில்லை என தமிழர் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மகாநாட்டின்போது இலங்கை எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஆலோசிக்கப்பட்டதாக வெளியான தகவல்கள் குறித்து இருதரப்பலிருந்தும் உறுதிப்படுத்தும் செய்திகள் வெளியாகவில்லை. ஆனால், இந்தியா இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கையேதும் எடுக்கும் சந்தர்ப்பம் எழாது என்பது இச்சந்தர்ப்பத்தின் போது இலங்கைக்குப் புரிந்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்தியாவுக்கான வியூகத்தில் ஓரளவு திருப்தி கண்டுள்ள இலங்கை அடுத்ததாக அமெரிக்காவின் பக்கம் தம் கவனத்தை திருப்பியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. அமெரிக்காவுக்கு எதிராக இனவாதக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் பல கருத்துக்களை தொடர்ந்தும் வெளியிட்டுவருகின்றனர்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய அமெரிக்காவுக்கு எதிராக தெரிவித்த கடுமையான விமர்சனம் சகல ஊடகங்களிலும் வெளியாகின. அமெரிக்கா உதவி செய்யாவிட்டால், நாம் சீனாவின் உதவியைப் பெறுவோம். போரின்போது அமெரிக்கா எவ்வித உதவியையும் செய்யவில்லை என அவர் தெரிவித்திருப்பது அமெரிக்காவை சீண்டிப்பார்க்கும் முயற்சியாகவே அமையும் என ஐ.தே.க. பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு இலங்கை தொடர்ச்சியாக செய்துவரும் உதவிகளை இலங்கை அரசு எளிதில் மறந்துவிட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளையில், இலங்கை அரசுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பவர் தண்டிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருவதாக இலங்கையின் அமெரிக்கத் தூதுவர், வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளாது.

இது இப்படியிருக்க, கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான இலங்கையின் அறிக்கையில் அது தெரிவித்தவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளதா என ஆராய்வதற்காக அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அதி உயர் மட்டக்குழுவொன்று அண்மையில் கொழும்பு வந்தது.

இந்த மூவர் கொண்ட அமெரிக்க குழுவினர் பிரதம நீதியரசர் நீக்கம், மனித உரிமை மீறல்கள் அதிகரித்தல், தமிழர்களின் மீள்குடியேற்றம், நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் செயற்படுத்தப்படாமை தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என சில சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

மேலும் பசுபிக்- இந்த சமுத்திர கடல் எல்லைகளில் அமெரிக்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கை எவ்விதம் உதவ முடியும் என்பது குறித்தும் ஆராயப் பட்டுள்ளது. அவ்வாறு ஆலோசிக்கப்படும் போது அமெரிக்காவுக்குச் சார்பாக நடந்து கொள்வதன் மூலம் அதன் ஆதரவைப் பெறலாம் என்பது இலங்கையின் வியூகமாக இருந்தது.

ஆனால், அமெரிக்கா தம் தூதுவராலயங்களின் மூலம் இலங்கைக்கு எதிரான கடும் நடவடிக்கைக்கு ஆதரவுதேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக இன்னர் சிட்டி பிரஸ் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தது.

இவற்றுக்கு மத்தியில் இலங்கை வந்த அமெரிக்கக்குழு, கடும்போக்கான செயற்பாட்டை வடக்கில் அரசு முன்னெடுக்கிறது என்று யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்திடம் தெரிவித்துள்ளது. இது இலங்கை மீதான அமெரிக்காவின் அணுகுமுறைகள் தவறானது, இலங்கைப்படை அதிகாரிகளை அமெரிக்கா அநீதியான முறையில் நடத்துவது தவறானது என அக்குழுவிடம் தெரிவிக்க இருந்த இலங்கைக்கு விசனத்தை ஏற்படுத்துதாகவே அமையும்.

மேலும் அக்குழு கூட்டமைப்பினரைச் சந்தித்ததும் இலங்கைக்கு புண்ணில் புளி வார்த்ததாகவே அமைந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

அமெரிக்கா இன்னொரு கடுமையான அறிக்கையை இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் என்ற பொதுவான உலக எதிர்பார்ப்பு உறுதியாகிவருகிறது என்பதே இப்போதைக்கு உண்மை.

*வீ.ஆர். வரதராஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ஓ.எம். நிறுவனத்தின் வாழ்வாதார உதவி சிலருக்கு கிடைக்கவில்லை

## அலைந்து திரியும் முன்னாள் போராளிகள்

(றெட்பானா)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையான முன்னாள் போராளிகளுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தால் வாழ்வாதார மேம்பாட்டுக்காக சுய தொழில் முயற்சிக்கு சுமார் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அல்லது காசோலைகள் வழங்கப்பட்டு வந்தன.

இவ்வாறு வழங்கப்பட்டு வந்த உதவிப் பணம் பெருமளவானோருக்கு கிடைக்கவில்லை. இப் பணம் கிடைக்கப் பெறாதவர்கள் கிளிநொச்சி ஐ.ஓ.எம். நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உதவிப் பணம் கிடைக்காதவர்கள் தொடர்ந்தும் பல சிரமத்தின் மத்தியில் கிளிநொச்சி ஐ.ஓ.எம். நிறுவனத்திற்கு அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது. இதில் சிலருக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு பதிவுகளை மேற்கொண்டு உதவிப் பணம் வழங்குவதற்கான திகதி வழங்கப்பட்டும் இதுவரை அவர்களுக்கு அப்பணம் கிடைக்கப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, உரியவர்கள் உடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-260)

# கால்நடை வைத்தியர்கள் இன்று சுகவீன விடுப்புப் போராட்டம்

கால்நடை வைத்தியர்கள் இன்று புதன்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் தலைவர் கே.சி.எச். கொத்தலாவல தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்கள் பல அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அரச கால்நடை வைத்தியர்கள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

சுகவீன விடுமுறையை அறிவித்து இன்றைய தினம் பணியில் இருந்து விலகியிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கால்நடை வைத்தியர்கள், கால்நடை ஆராய்ச்சி அதிகாரிகள், விலங்கு கட்டுப்பாட்டு அதிகாரிகள் உள்ளிட்டோர் பணியில் ஈடுபடமாட்டார்கள். அத்துடன் லிப்டன் சுற்று வட்டத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் நடத்தப்படும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# வாக்குச் சீட்டு விவகாரம்; அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(நுவரெலியா)

நுவரெலியா தேர்தல் அலுவலகத்தில் இருந்த 3 ஆயிரத்து 430 வாக்குச்சீட்டுகள் கலகொடிஹேன மகா வித்தியாலயத்திற்கு அருகில் எப்படி விழுந்து கிடந்தது என்பது குறித்து உரிய விசாரணைகளை நடத்தி அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு அத்தனகல்ல மேலதிக நீதவான் எஸ்.சீ. பெரேரா நிட்டம்புவ பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்டிருந்த சின்னத்திற்கு எதிரில் புள்ளடி இடப்பட்டிருந்த வாக்குச்சீட்டுகள் குறித்த பாடசாலைக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டன.

இந்த வாக்குச்சீட்டுகள் சுமை ஊர்தியில் கொண்டு வரப்பட்ட போது வீதியில் விழுந்து கிடந்ததாகவும் அவற்றை பெற்றுக்கொள்ள தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகள் சிலர் வந்துள்ளதாகவும் அவற்றை அவர்களுக்கு வழங்க பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம் வாக்குச் சீட்டுக்களை நீதிமன்றத்தின் பொறுப்பில் வைக்குமாறு உத்தரவிட்டது. (அ-2)

# வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இராணுவ மயப்படுத்தலா?

## சந்தேகம் வெளியிடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

வடக்கில் மாத்திரமல்ல தற்போது தெற்கிலும் இராணுவமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்ற பாரதூரமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க அரச பிரதிநிதிகள், இராணுவத்தின் அறிக்கை தொடர்பான அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் இந்த அனைத்து நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாது தவிர்க்க அரசாங்கம் முயற்சித்து வருவதை உணர்த்துகின்றது.

அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக அரசாங்கம் நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் உறுதிமொழியை வழங்கி விட்டு மீண்டும் அதனை செயற்படுத்த முடியாத வகையில் சிற்சில அறிக்கைகளை பல்வேறு தரப்பினரிடம் இருந்து பெற்றுக்கொள்வது ஜனாதிபதியையும் தரம் தாழ்த்தியுள்ளது.

அத்துடன் நாடும் தரம் தாழ்த்தப்படும். வடக்கில் மாத்திரமல்ல தற்போது தெற்கிலும் இராணுவ மயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்ற பாரதூரமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் இறுதி நோக்கம் இலங்கையில் இராணுவ அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகிறதோ என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக மீண்டும் இராணுவத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதன் மூலம் அரசாங்கம் சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீற முயற்சித்து வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன்பாடாகியது.

★ 1649 - முதலாம் சார்ள்ஸ் மன்னன் தூக்கிலிடப்பட்டான். அவனது மனைவி ஹென்றியேட்டா மரீயா பிரான்ஸ் சென்றாள்.

★ 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1649 - இளவரசர் சார்ள்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சார்ள்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.

★ 1820 - எட்வர்ட் பிரான்ஸ்ஃபீல்ட் அண்டார்டிக்காவில் தரையிறங்கினார்.

★ 1835 - ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜாக்சன் கொலை முயற்சியில் இருந்து தப்பித்தார்.

★ 1889 - ஆஸ்திரியாவின் இளவரசர் ருடோல்ஃப் தனது காதலியுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

★ 1930 - உலகின் முதலாவது radiosonde சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டது.

★ 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேன் லேத்திச்சிவ் என்ற இடத்தில் யூதர்கள் ஆயிரக்கணக்கில் நாசிகளால் கொல்லப்பட்டனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பால்ட் டிக் கடலில் வில்ஹெலம் கூஸ்ட் லொஃப் என்ற பயணிகள் கப்பல் சோவியத் நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கப்பட்டதில் அதில் பயணம் செய்த 9 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1948 - இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி இந்துத் தீவிரவாதியான நாதுராம் கோட்சேயினால் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1964 - தென் வியட்நாமில் ஜெனரல் நியுவென் கான் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1972 - வட அயர்லாந்தில் விடுதலைப் போராட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட 14 பேர் ஐக்கிய இராச்சிய துணை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.

★ 1976 - தமிழ்நாட்டில் மு.கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டது.

★ 1994 - பியோத்தர் லேக்கோ சதுரங்க ஆட்டத்தில் உலகின் முதலாவது வயதில் குறைந்த கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

★ 2000 - கென்யாவின் விமானம் ஒன்று அட்லாண்டிக் கடலில் ஐவரிகோஸ்ட் கரையில் வீழ்ந்ததில் 169 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003 - பெல்ஜியம் ஓரினச் சேர்க்கைத் திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியது.

★ 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 5 பேர் மட்டக்களப்பு வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32 ஆவது ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியாவார் (இ.1945)

★ 1899 - மாக்ஸ் தெய்லர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1972)

★ 1910 - சி.சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ.2000)

★ 1941 - டிக் சேனி, அமெரிக்காவின் 46 ஆவது துணை ஜனாதிபதி

★ 1949 - பீட்டர் ஆகர், நோபல் பரிசு பெற்றவர்

★ 1974 - கிரிஸ்டியன் பேல், பிரித்தானிய திரைப்பட நடிகர்

### இறப்புகள்

★ 1832 - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், கடைசி கண்டி அரசன்

★ 1891 - சார்ள்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல் கிளர்ச்சியாளர் (பி.1833)

★ 1928 - ஜொஹான்னஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1867)

★ 1948 - மகாத்மா காந்தி (பி.1869)

★ 1948 - ஓர்வில் ரைட், ஐக்கிய அமெரிக்காவின் வானூர்தி நிபுணர்

★ 1981 - வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1897)

★ 1991 - ஜோன் பார்டீன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1908)

★ 2007 - சிட்னி ஷெல்டன் அமெரிக்க எழுத்தாளர் (பி.1917)

★ 1874 - இராமலிங்க அடிகளார், ஆன்மீகவாதி (பி.1823)

### சிறப்பு நாட்கள்

★ இந்தியா- தியாகிகள் தினம்

★ உலக தொழுநோய் ஒழிப்பு தினம்

### ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன்



ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் இலங்கையின் கண்டி அரசை ஆண்ட கடைசி மன்னன் ஆவார். முன்னைய அரசன் ஸ்ரீ ராஜாதி ராஜசிங்கன் பிள்ளைகள் இன்றி இறந்தபோது இவர் சிம்மாசனம் ஏறினான். இறுதியாகக் கண்டிப் போரில் 1815 இல் பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்ட இவர் சிறை பிடிக்கப்பட்டார்.

இவர் தமிழ் நாட்டின் நாயக்கர் வம்சத்தில் தோன்றிய ஒரு இளவரசன் ஆவார். இவரது இயற்பெயர் கண்ணுசாமி. இவர் ஸ்ரீ ராஜாதிராஜசிங்கனின் மருமகன் ஆவார். முடிசூட்டலின் போது ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்னும் சிம்மாசனப் பெயருடன் கண்ணுசாமி முடி சூட்டப்பட்டார்.

#### அரசுரிமைப் போட்டி


ராஜாதி ராஜசிங்கனின் வாரிசு உரிமைக்காக அவரது அரசியின் தம்பியும் போட்டியிட்டார். உண்மையில் அவருக்கே கூடிய உரிமை இருந்ததாகக் கருதப்படுகிறது. பதவியேற்ற ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பல சதி முயற்சிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவரது ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றின் மிகவும் குழப்பமான காலங்களில் ஒன்றாகும்.

#### கண்டி கைப்பற்றப்படல்

ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் கண்டி அதிகாரி எனப்படுபவர் இவருக்கெதிராக குழப்பங்களை தூண்டி விட்டு தப்பித்து கொழும்பில் பிரித்தானியருடன் சேர்ந்து கொண்டார். இவரது தூண்டுதலின் பேரில் பிரித்தானியர் மீண்டும் 1815 பெப்ரவரி 10 ஆம் திகதி கண்டிக்குள் நுழைந்தனர். மார்ச் 2 ஆம் திகதி கண்டி ஒப்பந்தம் என இன்று வழங்கப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி அரசு பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. பிடிபட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அங்கே பிரித்தானியரால் கொடுக்கப்பட்ட சிறிதளவு பணத்தில் இரு மனைவியருடன் வாழும் நிலை ஏற்பட்டது. 1832 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி தனது 52 ஆவது வயதில் அவர் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது ஆண்டு நற்பணியில் நம் ஆசான் பேராசிரியர் மா.சின்னத்தம்பி



**பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் தனது பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்தபின் 09.03.1973 இல் இப்பிரதேசத்தில் கற்பித்தல் பணியில் கால்பதித்தவர்.**

**யுத்தம், இடப்பெயர்வு, குடிபெயரும் தகைமை காணப்பட்ட நிலைமையிலும் இப்பிரதேசத்தில் தொடர்ந்து பணியாற்றுபவர்.**

**16 வருடங்கள் பள்ளி ஆசிரியராகவும் 4 வருடங்கள் சேவைக்கால ஆலோசக்ராகவும் 10 வருடங்கள் மேலதிக பிரதம பரீட்சகராகவும் 5 வருடங்கள் (2) துறைத்தலைவராக்வும் 15 வருடங்கள் விரிவுரையாளராகவும் 7 வருடங்கள் பேராசிரியராகவும் பணியாற்றி வருபவர்.**

**இப்பிரதேசத்தில் தமது கற்பித்தல் பணி நிலையில் நாற்பது ஆண்டுகளை 09.03.2013 இல் சிறப்புடன் நிறைவு செய்கிறார்.**

**இவரது பணியின் உன்னதம் இன்று கல்விச் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றது. இன்று அவரது 65 ஆவது பிறந்த தினமாகும்.**

பேராசிரியர்மா.சின்னத்தம்பி அவர்கள்யாழ்ப்பாணத்திலேயே தனது கல்வி வாழ்வையும் தொழில் வாழ்வையும் ஒன்றிணைத்த வகையில் முழுமையாக வாழ்ந்து வருபவர்.

☆ **கல்வி வாழ்க்கை**

தமது பாடசாலைக் கல்வி முழுவதையும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பாடசாலைகளிலேயே கற்றவர். பாரதி பாஷிய வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை நிறைவு செய்தபின் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையிலும் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இடை நிலைக் கல்வியைக் கற்றார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்லூரி மட்ட கல்வியை சிறப்பாகக் கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் இணைந்தார். இக் காலம் முழுவதும் உன்னதமான மாணவராகவும் பல மன்றங்களின் தலைவராகவும் இந்து இளைஞன் (1968) சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப்பட்டம் பெற்ற இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையிலும் கல்வியியற்றுறையிலும் முதுமாணி (MA) முதுதத்துவமாணி (M Phil) பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்.

☆ **தொழில் வாழ்க்கை**

பல்கலைக்கழக பட்டத்தை நிறைவு செய்தபின் குறுகிய காலம் மத்திய வங்கியில் தற்காலிமாக பணியாற்றி பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி திணைக்களத்தின் பொருளியல் விரிவுரையாளராக இரண்டு வருடங்கள் கடமை புரிந்தார்.

பின்பு ஒன்றரை தசாப்த காலமாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பொருளியல் ஆசிரியராக மிகவும் சிறப்பாக பணியாற்றிப் புகழ் பெற்றார்.

இதேகாலத்தில் சமூகக்கல்வி பாடத்தில் சேவைக்கால ஆலோசகராக (ISA) வும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் பொருளியல் பாட பரீட்சகராகவும் கல்வியமைச்சின் பரீட்சைத் திணைக்களத்தின் பொருளியல் பாட மேலதிக பிரதம பரீட்சகராகவும் சிறப்பாக பணியாற்றினார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்பித்த போது முதலாம் தர அதிபராக போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட (1989) போதிலும் அப்பதவியை ஏற்காது பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியிலும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திலும் பதினைந்து ஆண்டுகள் பகுதி நேர பொருளியல் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற் கல்வித் துறையாக விளங்கும் கல்வித் துறையில் பணியாற்றி வருகிறார். உதவி விரிவுரையாராக இணைந்த இவர், பல கற்கை நெறிகளின் இணைப்பாளராக பணியாற்றியதோடு கல்வித் துறையினதும் சட்டத்துறையினதும் தலைவராகவும் கடமை புரிந்தார். இளம் விரிவுரையாளர்களை வலுவூட்டும் பணியில் ஈடுபடும் பதவியுயர் விருத்தி நிலையத்தின் (Staff Development Centre) பதில் பணிப்பாளராகவும் சிறந்த வளவாளராகவும் செயற்பட்டார். தற்போதும் செயற்பட்டு வருகிறார்.

தேசிய ரீதியில் கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு என்பவற்றிலும் விரிவுரையாளராகவும் வளவாளராகவும் பணியாற்றியுள்ளார்.

2011 ஆம் ஆண்டில் தமக்கு கிடைத்த ஓராண்டு தொழில் நிலை விடுமுறையைப் பயன்படுத்தி கனடா நாட்டுக்குச் சென்றார்; உலக தரத்தில் பத்தொன்பதாவது தர நிலையில் (2011) இருந்த ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் இடைவரவு கல்விமானாக (Visiting Scholar) நியமனம் பெற்று கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டார். அங்கிருந்த காலத்தில் தொடர்ச்சியாக முப்பத்தைந்து வாரங்கள் அங்குள்ள நாளிதழில் யாழ்ப்பாணத்தில் கல்வி மற்றும் சமூக மாறுதல்கள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதி வந்தார். அது பின்னர் கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தினால் நூலாக வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பேராசிரியராகவும் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் பொருளியல் மற்றும் கல்வியியல் வருகை விரிவுரையாளராகவும் இவர் ஆற்றி வரும் பணி உன்னதமானது. பதினைந்து ஆண்டுகள் மூதவை உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

☆ **பாடசாலைகளுடனான பிணைப்பு**

யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுடன் நேரடித் தொடர்புகளை பேணி வருவதன் மூலம் ஆசிரியர்களை வலுவூட்டல், ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல் தொடர்பான பணிகளில் நிறைந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

சிறிய பாடசாலைகள் மற்றும் நலிவடைந்த பாடசாலைகளைத் தரிசிப்பதிலும் அவர்களுக்கு ஊக்கமளிப்பதிலும் அளவுக்கு மீறிய ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

பாடசாலைச் சஞ்சிகைகளுக்கு முந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். பரீட்சை தொடர்பாக நலிவுற்ற மாணவர்களுக்கு கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் வழிகாட்டல் செயலமர்வுகளை அண்மைக்காலமாக நடத்தி வருகிறார். இதில் ஏறக்குறைய இரண்டாயிரம் மாணவர்கள் பங்கு பற்றி பயன் பெற்றனர்.

பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் வழிப்படுத்தும் பல செயலமர்வுகளை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஹற்றனிலும் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

☆ **நூல் ஆக்கப் பணி**

ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் தமது தொழில் வாழ்வை அகலப்படுத்திக் கொண்ட இவர், ஆசிரியர்களுக்கும் உயர்தர மாணவர்களுக்கும் பயன்படும் எட்டு பொருளியல் நூல்களையும் ஏராளமான பொருளியல் கட்டுரைகளையும் பொருளியலாளன் என்ற சஞ்சிகை (உதவி ஆசிரியர்)யையும் எழுதி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு உதவும் வகையில் உயர் கல்வித்துறையில் ஏராளமான கட்டுரைகளையும் 13 நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது இரண்டு நூல்களை உயர் கல்விப் பிரிவின் சிறந்த நூல்களாக தெரிவு செய்து வடக்கு, கிழக்கு மாகாண சபை பாராட்டியிருந்தது.

யாழ்ப்பாணத்து பாடசாலைகளின் சமகாலப்பிரச்சினைகள் பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் யாழ்.தினக்குரல் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிய 25 கட்டுரைகள் மிகவும் பிரபல்யமானவை.

நாற்பது ஆண்டுகளாக கல்விப் புலத்தை செழுமைப்படுத்தும் அவாவுடன் தொடர்ந்து அவர் சமூகப் பற்றுணர்வுடன் கட்டுரைகளை எழுதி வருவது பெருமைப்படத்தக்கதாகும்.

☆ **சமூக ஈடுபாடு**

**தேவையுடையவர்கள், நலிவுற்றவர்கள் மற்றும் எளியவர்களுக்கு எமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தல்** என்ற சமுதாய நோக்குடன் கடந்த நாற்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலேயே பணியாற்றி வருகின்றார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் நோக்குடன் செயற்பட்டு வரும் யாழ்ப்பாண ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவன மதியுரையாளர்களில் ஒருவராக பணியாற்றிவரும் இவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் என்பவற்றின் ஆயுட்கால அங்கத்தவராக இருந்து தமிழியற் சேவைகளிலும் ஈடுபடுகின்றார். இவர் கவர்ச்சிகரமான பட்டிமன்றப் பேச்சாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது மாணவர்கள் பலர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளர்களாக சிறப்பாக பணியாற்றுகின்றனர்.

இவரது கல்விசார் பணிகளின் சிறப்பை கௌரவப்படுத்தி 2008 ஆம் ஆண்டு இவரது மாணவர்களும் கல்விமான்களும் உன்னதமான முறையில் இவரது மணி விழாவினை கொண்டாடி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்க சமூக நிகழ்வாகும்.

☆ **நாற்பது வருட நற்பணிகள்**

நல்ல ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் உன்னதமான வளவாளராகவும் மனித நேயம் மிக்கவராகவும் நலிவுற்ற பாடசாலைகளின் நண்பராகவும் தொடர்ந்து இதே பிரதேசத்தில் நான்கு தசாப்தங்களாக சேவையாற்றும் பேராசிரியர் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தொடர்ந்து நாம் வாழும் பிரதேசத்திற்கு உயரிய பங்களிப்பைச் செய்வார் என நாம் முழுமையாக நம்புகிறோம்.

**மாவை. கஜன்**

# இலங்கையுடனான உறவை வலுப்படுத்துகிறது இந்தியா

## பிரிட்டன் ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பினாலும் கூட இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை இந்தியா வலுப்படுத்தி வருவதாக பிரித்தானியாவின் செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம்சிங் இலங்கைக்குக் கடந்த மாதம் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்பின்னர் இலங்கையின் கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலக தலைமையிலான 10 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவுடன் இந்தியாவின் தலைமை தளபதிகளின் குழு தலைவர் எயர்சீவ் மார்சல் பிறவுண் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

குறைந்த பட்சம் இந்த ஒரு விவகாரத்தைக் கொண்டேனும் உள்நாட்டு அரசியலை விட தேசிய நலன்களுக்கே இந்தியா முன்னுரிமை கொடுக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது என்றும் அதில் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# முறிகண்டி பிள்ளையார் ஆலய சுகாதாரம் குறித்து ஆராய்வு

## அமைச்சர் டக்ளஸ் நேரில் சென்றார்

திருமுறிகண்டிபிள்ளையார்கோவில்வளாகம் மற்றும் மலசலகூடங்கள் சுத்தமாகவும் சுகாதார முறையிலும் பேணப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

முறிகண்டிப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கோவில் வளாகத்தினதும் அங்குள்ள மலசலகூடங்களின் சுத்தம் தொடர்பிலும் நேரடியாக ஆராய்ந்தறிந்து கொண்டார்.

அதனுடன் அங்குள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

அங்கு வருகை தந்திருந்த மக்களுடன் கலந்துரையாடிய அவர், முறைகேடுகளுக்கு ஒரு போதும் தாம் இடமளிக்கப் போவதில்லையென்றும் இப் பகுதி மக்களின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு துறைசார்ந்தவர்கள் செயற்பட வேண்டுமெனவும் குறிப்பாக அங்குள்ள மலசலகூடங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் சரியான முறையில் பேணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜாதகப்படி அதிக இலாபம் பெறுவோர் யார்?

இலாபம் என்ற சொல்லே வியாபாரிகளுக்குத்தான் சொந்தம் என்று எண்ணக் கூடாது. உத்தியோகத்தர்கள், தொழிலாளிகள், கலைஞர்கள் முதலிய அனைவருக்கும் சொந்தம்தான்.

இலாபம் என்ற சொல்லை மையப்படுத்தி யார் யாருக்கு எப்படிப்பட்ட இலாபம் கிடைக்கிறது என்று பார்க்க கிரகங்கள் வழி வகுக்கின்றன.

வாங்கிய விலையை விட விற்றவிலை அதிகமானால் இலாபம், குறைவானால் நட்டம், இது வியாபாரிகளுக்கு. குறைந்த வேலைக்கு நிறைய சம்பாதிக்கும் தொழிலாளிக்கு வேலையால் இலாபம்.

தான் எதிர்பார்த்ததைவிட அதிக வருமானம் கிடைத்தால் விவசாயிகளுக்கு இலாபம்.

தன் தகுதிக்கு மீறிய உத்தியோகம் கிடைத்தால் அது உத்தியோக இலாபம். இப்படிப்பல உண்டு.

ஒருவர் ஜாதகப்படி லக்னத்திலிருந்து எண்ண வரும் பதினொராமிடம் இலாபதானம் என்று கருத வேண்டும். அந்த இடத்திற்குரிய கிரகத்தன்மைக்கு ஏற்பவும் லக்னாதிபதிக்கும் இலாபாதிபதிக்கும் உள்ள நேசத் தன்மைக்கேற்பவும் ஜாதகருக்கு இலாபத்தைச் சொல்ல வேண்டும்.

அந்த இடத்தில் இருக்கும் கிரகத்தின் காரக ஆதிபத்தியத்தின் நிலைக்குத் தகுந்தபடியும் இலாபாதிபதி நின்ற ஸ்தான பலத்துக்கு ஏற்பவும் இலாபம் ஏற்படும். இலாபாதிபதியைப் பிரித்த கிரகத்தின் ஆதிபத்தியத்துக்குத் தகுந்த விதத்திலும் இலாபம் ஏற்படும்.

இலாபஸ்தானத்தைப் பார்த்த கிரகத்தின் காரக ஆதிபத்தியத்துக்குகந்த விதத்திலும் ஏற்படும்.

இப்படிப் பல உண்டு. ஆனால், துலாம், கன்னி லக்னங்களுக்கு முறையே சூரியன், சந்திரன் ஒரே ஆதிபத்தியமுடையவர்களாக இருப்பதைப் போன்று மற்ற லக்னக்காரர்களுக்கு அமைவதில்லை.

வான மண்டலத்தின் இளவரசர்களான சூரிய, சந்திரனுக்கு ஆளுக்கு ஒரு வீடே இருக்கும் போது ஏனைய கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு வீடுகள் இருக்கின்றன.

எனவே, இலாபாதிபதியாக இருக்கும் ஒரு கிரகம் வேறொரு கெட்ட ஸ்தான அதிபதியாக இருப்பதும் உண்டு. அப்போது குறிப்பிட்ட இலாபப் பலனை ஜாதகர் அனுபவிப்பது கடினம்.

இலாபாதிபதி தெசாபுத்தி காலங்களில் எல்லாவற்றிலும் இலாபம் ஏற்படுமென்று ஜோதிடர் சொன்னால் நிச்சய பலன்களே ஏற்படும்.

உதாரணமாக மேட லக்னத்தில் பிறந்த ஒருவருக்கு இலாபாதிபதி சனியாகிறார். இருப்பினும் மேட லக்கினக்காரர்களுக்கு காரிய ஸ்தானமான கேந்திர ஸ்தானம் பெற்ற சனிக்கு லக்னாதிபதி செவ்வாயுடன் உறவு சரி இல்லாததால் பதினொராமிடத்தில் இருந்தால் எதிர்பாராத கஷ்ட நஷ்ட பலன்களே அவன் திசையில் ஏற்படுத்துவார். இலாபத்தை நம்பினால் ஏமாற்றமே மிஞ்சிவிடும். பதினொராமிடத்தில் நின்ற சனி ஜென்ம லக்னத்தைப் பார்வையிடுவதால் ஜாதகரின் நடையுடை பாவனையிலும் சுறுசுறுப்பு குறைந்து மந்த நிலையே உண்டாகும்.

அடுத்து ரிஷப லக்னத்துக்கு வருகிறோம். இலாபாதிபதியான குரு எட்டாமிடத்திற்கும் அதிபதியானதாலும் லக்னாதிபதியான சுக்கிரனுடன் நட்புறவு சரியாக இல்லாததாலும் குரு இலாபாதிபதியாக இருந்தும் நற்பலன்களை எதிர்பார்ப்பதற்கில்லை. குருவின் காரகமான பதவி உயர்வு, அதிக தனப்பிராப்தி, புத்திர சௌக்கியம், தெய்வ வழிபாடு, குரு உபதேசம் முதலியன ஒரு நிலையாகக் காணாமல் ஏற்றத் தாழ்விலேயே காணப்படும்.

அடுத்து மிதுனலக்னத்துக்கு வருகிறோம். மிதுனத்திலிருந்து எண்ண வருகின்ற பதினொராமிடம் மேடம் ஆவதால் அதன் அதிபதி செவ்வாயாகும். ஆறு, பதினொன்று முதலிய ஸ்தானங்களுக்கு அதிபதியாகும். செவ்வாய், லக்னாதிபதியான புதனுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு சந்தேகத்திற்குரியதாகையால் செவ்வாயின் காரகத்தினால் ஏற்படும் இலாபம் மிதுன லக்னகாரர்கள் எதிர்பார்ப்பதற்கில்லை.

எனவே, சகோதர ஒற்றுமை, வீடு, நிலம் போன்ற ஸ்திரச் சொத்துக்களில் இவர்களுக்குச் சிக்கல் இல்லாமல் அமைவதில்லை. மற்றும் வைத்திய செலவினங்களுக்காக அடிக்கடி பொருள் செலவிட வேண்டிவரும்.

கடக லக்னத்திற்குப் பதினொராமிடம் இடபம் ஆவதால் அதன் அதிபதி சுக்கிரன், லக்னாதிபதியான சந்திரனிடம் வெறுப்புக் கொள்வதால் கடக லக்னகாரர்களுக்குச் சுக்கிரன் காரகத்தால் ஏற்படும் பலன்களை அதிகம் சொல்வதற்கில்லை.

எனவே, கணவன்-மனைவி சுகம். பெண்களால் சுகம். ஆடை, ஆபரண சுகம். வாகன சுகம் முதலியனவும் குளுமையான ஆகாரம், குளிர்ச்சியான பானம் முதலியனவும் ஜாதகருக்கு திருப்தியைத் தராது. எல்லாச் சௌகரியங்களும் இருந்தும் இப்பலன்களை அனுபவிக்க முடியாத குறை இவர்கள் மனதை எப்போதும் வாட்டிக் கொண்டிருக்கும்.

இதுவரையில் நாம் சொல்லி வந்த நான்கு லக்கினங்களுக்கும் (மேடம் முதல் கடகம் வரை) இலாபாதிபதியாக வரும் கிரகம் முறையே காரியாதிபதியாவும் எட்டாமிடத்ததிபதியாகவும் ஆறாமிடத்ததிபதியாகவும் வந்து மற்றொரு பாபாதிபத்தியத்தில் வலுப்பது கவனிக்கத்தக்கது.

(அடுத்தவாரம் தொடரும்)

## ஜோதிடக் களம்

# மன்னார் முத்தமிழ் விழா பெப்ரவரி 3 ஆம் திகதி

(மன்னார்)

மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கிய மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் பெப்ரவரிமாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.


மன்றத்தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் பிரதம விருந்தினராக வவுனியா தமிழ்சங்கத் தலைவர் தமிழ்மாமணி தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொள்வார். முதல் நிகழ்வாக இடம்பெறும் விழாநாள் மங்கலத்தில் மன்னார் அகிலாண்டேஸ்வரி ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ. வீ.விஜயபாபுக்குருக்கள் நந்திக் கொடியினை ஏற்றி வைப்பார். மங்கல இசையினை லயஞான நாதகலாசூரி வித்துவான் சிவபாலன் குழுவினர் வழங்குவார்கள்.

இந்நிகழ்வில் மன்னார் ஸ்ரீ சாகித்தியா நடனப்பள்ளியின் மாணவர்களின் வரவேற்பு நடனம் நடைபெறும்.

ஆசியுரையினை திருக்கேதீஸ்வர சிவஸ்தலத்தின் பிரதமகுரு சிவநதிகருணானந்தக் குருக்கள்,வாழ்த்துரையினை மன்னார் தமிழ்ச் சங்கத்தின்தலைவர் அருட்பணிதமிழ்நேசன் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து தமிழுக்கும் கலை இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழறிஞர்கள், கலைஞர்கள் ஐவர் விழா மேடையில் கௌரவிக்கப்படவுள்ளார்கள். விசேட நிகழ்வாக எக்காலத்திற்கும் பொருத்தமான அறங்களைப் பெரிதும் எடுத்தியம்பிய இதிகாசம் இராமாயணமா? மகாபாரதமா? என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெறும்.

பிரதம விருந்தினர் தமிழருவி த.சிவகுமாரன் நடுவராக அமைய இடம்பெறும் இப்பட்டிமண்டபத்தில் இராமாயணமே என சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள், எஸ்.ரமேஷ், எல்.சுரேஷ் ஆகியோரும் மகாபாரதமே என வே.பொ.மாணிக்கவாசகர், சோ.றோகன் ராஸ், பி.சதீஸ் ஆகியோரும் வாதாடவுள்ளனர். (அ-9)



காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வின் போது...

# இந்தியாவின் அழுத்தத்தாலேயே சம்பிக்க ரணவக்க நீக்கப்பட்டார்

## ஐ.தே.க ஆரூடம்

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பதவியில் இருந்து சம்பிக்க ரணவக்க விலக்கப்பட்டமையானது இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவினால் பிரேரிக்கப்பட்ட யோசனைக்கு அமையவே இந்த மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பூர் அனல் மின் நிலையத்தை அடிப்படையாக கொண்டே இந்த மாற்றம் நிகழ்த்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை குறித்து ஆராய அமெ.குழு வருகை தந்தது

## அமைச்சர் விமல் ஒப்புதல்

உலக அரங்கங்களில் இலங்கைக்கு எதிராக பயன்படுத்துவதற்கான தகவல்களை சேகரிப்பதற்கே அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மூன்று பிரதிநிதிகளும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அதுவே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது என அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.

ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு மாவத்தகமையில் வீடுகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் சட்டம், ஒழுங்கு என்பன சீர்குலைந்துவிட்டதெனவும் இதனால் மனிதாபிமான நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் பற்றி சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் உலகுக்கு காட்டுவதே இந்த மூன்று அமெரிக்க அதிகாரிகளினதும் எண்ணமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் கருத்தை ஆதரிக்கும் பலர் இங்கிருப்பதுதான் சோகமான விடயம். ஐ.தே.க.வும் மக்கள் விடுதலை முன்னணியும் இலங்கையில் சட்டம், ஒழுங்கு இல்லையென கூறுகின்றனர். இதையே தமிழ் புலம்பெயர்ந்தோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலை புலிகள் இயக்க அனுதாபிகளும் கூறுகின்றனர்.

இவர்கள் யாவரும் மனிதாபிமான நடவடிக்கையின்போதும் இதையே கூறினர் என்றார். (அ-2)

# 150 இலட்சம் செலவில் கலாசார மண்டபம்

(பண்டத்தரிப்பு)

கலை மற்றும் கலாசார அமைச்சினால் சங்கானை பிரதேசத்திற்குரிய கலாசார மண்டபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டட நிர்மாணப்பணி 150 இலட்சம் ரூபா செலவில் துரித கதியில் இடம் பெற்று வருகின்றது.

இக்கட்டட நிர்மாணப் பணி நிறைவடைந்ததும் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-3-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா–வங்கதேசம் இடையே
# குற்றவாளிகள் பரிமாறும் ஒப்பந்தம் கைச்சாத்தானது

(புதுடில்லி)

இந்தியா வங்கதேசம் இடையே குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

உள்துறை நேற்று முன்தினம் அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டே, வங்கதேச உள்துறை அமைச்சர் மொகையுதின் கான் ஆலம்பீர் ஆகியோரிடையே நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இது குறித்து ஷிண்டே கூறியதாவது,

இந்த ஒப்பந்தமானது பாதுகாப்பையும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவையும் மேம்படுத்தும்.

இதன் மூலம் கைதிகள் பரிமாறிக் கொள்ளப்படுவர். ஆனால் அரசியல் கைதிகளுக்கும் ஓராண்டுக்கு குறைவான தண்டனை பெற்றவர்களும் இந்த உடன்படிக்கையின் கீழ் பரிமாறிக் கொள்ளப்படமாட்டார்கள். கைதிகள் குறித்த விபரங்களும் வெளியிடப்படமாட்டாது.

வங்கபந்து ஷேக் முஜிபர் ரஹ்மான் கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் இந்தியாவில் இருந்தால் அவர்களைக் கைது செய்து வங்கதேசத்திடம் ஒப்படைப்போம். வங்கதேச இந்திய எல்லையில் வங்கதேசத்தவர்கள் சிலர் சுட்டக் கொல்லப்பட்டது துரதிர்ஷ்டமானது. இது நடந்திருக்க கூடாது என்றார்.


மொகையுதின் கான் ஆலம்கீர் கூறியது,

வங்கதேச குற்றவாளிகள் பலர் இந்தியாவில் ஒளிந்திருப்பதால் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவை விட வங்கதேசத்துக்குக் கூடுதல் பயன் கிடைக்கும் என்றார்.

வங்கதேச சிறையில் அடைக்கப்பட்டுள்ள உல்ஃபா பயங்கரவாதி சேத்தியாவை இந்திய அரசு தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரி வருகிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் அவர் விரைவில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கிடையே எளிமையான விசா நடைமுறைகள் குறித்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இதில் வங்கதேசத்தவர்களுக்கு பலமுறை வந்து செல்லும் விசா வழங்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது. (அ-5)

## விண்ணிற்கு மனிதனை அனுப்பும் திட்டம்; சோதனைக்கு குரங்கினை அனுப்பியது ஈரான்



விண்வெளிக்கு குரங்கினை அனுப்பி வெற்றிகரமாக ஈரான் சோதனை நடத்தியுள்ளது.

ஈரான் கடந்த 2011 ஆம் ஆண்டு விண்வெளிக்கு குரங்கினை அனுப்பி சோதனை செய்தது. எனினும் இம்முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதனையடுத்து மேற்குலக நாடுகளுக்கு போட்டியாக ஈரானும் அறிவியலில் முன்னேற்றம் அடைய 2020 ஆம் ஆண்டுக்குள் மனிதனை விண்வெளிக்கு அனுப்ப முடிவு செய்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் டெஹ்ரான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து 2 ஆயிரம் கிலோ எடை கொண்ட கவோஸ்ஹர் ரொக்கெட் மூலம் பிஸ்காம் என்ற விண்கலத்தினுள் குரங்கினை வைத்து விண்வெளிக்கு அனுப்பி வெற்றிகரமாக சோதனை செய்ததாக ஈரான் குடியரசு தொலைக்காட்சி சனல் அதிகாரபூர்வமான வீடியோ காட்சியுடன் செய்தி வெளியிட்டுள்ளாது.

இது குறித்து ஈரான் இராணுவ அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், முதலில் நடத்திய சோதனை தோல்வியடைந்தது. இப்போது வெற்றி பெற்றுள்ளோம்.

அடுத்த எட்டு ஆண்டுக்குள் ஷெரீப்பாஸ்ட் விண்கலம் மூலம் மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளோம் என்று அறிவித்துள்ளது. (அ-5)

## கனடாவின் விசா கொள்கைகளை தளர்த்த இந்தியா வேண்டுகோள்

(டொரண்டோ)

இந்தியா மற்றும் கனடா ஆகிய இரு நாடுகளின் இருதரப்பு வருடாந்திர வர்த்தகம் அடுத்த 3 வருடங்களில் 15 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க விசா கொள்கைகளை தளர்த்த வேண்டுமென்று இந்தியா கனடாவை கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக கனடாவிற்கான இந்திய தூதுவர் நிர்மல் வர்மா கூறுகையில்,

எதிர்வரும் பெப்ரவரி 5 தொடக்கம் 7 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறும் நீண்ட ஒருங்கிணைந்த பொருளாதார ஒப்பந்தம் தொடர்பான 7 ஆவது சுற்று பேச்சுவார்த்தையில் முக்கிய அம்சமாக இந்த விடயம் இடம்பெறும் என்று தெரிவித்தார்.

கனடாவில் உள்ள விசா தொடர்பான சட்டங்கள் வெளிநாடுகளில் முதலீடு மேற்கொள்ளும் இந்திய முதலீட்டாளர்கள், தொழில்புரிவோர் மற்றும் வர்த்தக பெருமக்களுக்கு பெரிதும் இடையூறாக உள்ளது என்று அவர் கூறினார்.

கனடா, இந்தியா ஆகிய இரு நாடுகளும் தற்போதுள்ள 5 பில்லியன் அமெரிக்க டொலர் என்று வருடாந்திர இரு தரப்பு வர்த்தகத்தை 2015 ஆம் ஆண்டில் 15 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிற்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**அணுசக்தி ஒப்பந்தம்**

இந்தியத் தூதுவர் மேலும் கூறுகையில்,

இரு நாடுகளுக்கும் இடையேயான அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். ஒப்பந்தம் மற்றும் பேச்சுவார்த்தை ஆகியவை முடிந்த நிலையில் அவற்றை செயற்படுத்துவதற்கான முயற்சிகளிலேயே தற்போது ஈடுபட வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## ஏமனில் தற்கொலைத்தாக்குதல்;
# 11 இராணுவத்தினர் பலி

(சானா)

ஏமன் நாட்டின் ரத்தாபகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அரேபிய தீபகற்பகத்திலேயே பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளது ஏமன் நாடு. இந்த நாட்டின் மீது பழங்குடியினர் துணையுடன் அல்கொய்தா தாக்குதல் நடத்தி வருகின்றது. அமெரிக்கா ஏமன் நாட்டுக்கு இராணுவ ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது.

கடந்த மாதத்திற்கு முன்பு பின்லாந்து மற்றும் ஆஸ்முரியாவை சேர்ந்த மூவரை சானா பகுதி பழங்குடியினர் கடத்தினர். பின்னர் அவர்களை அல்கொய்தாவினரிடம் விற்றுவிட்டனர். அவர்களை விடுவிக்க அரசு போராளிக்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததை தொடர்ந்து இராணுவத்தினர் போராளிக்குழுக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து ரத்தா பகுதி சோதனைச்சாவடி நோக்கி குண்டுகள் நிரப்பிய காரில் வந்த தற்கொலைப்படை போராளி மோதி வெடிக்கச் செய்தான். இதில் சோதனைச் சாவடி அருகே நின்ற இராணுவத்தினர் 11 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 17 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதல் குறித்து இது வரையில் எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## விருந்தினராக ரஜினி வருவது
# அமெரிக்காவுக்கு கௌரவம் மேரிலான்ட் மாகாண ஆளுநர்



தென்னிந்திய தமிழ் திரைப்பட நடிகர் ரஜினி அமெரிக்காவுக்கு அரச விருந்தினராக வரவேண்டும் என அந்த நாட்டின் மேரிலான்ட் மாகாண அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மேரிலான்ட் மாகாணத்தின் வெளியுறவு துறை துணை அமைச்சர் டாக்டர் ராஜன் நடராஜன் சென்னையில் ரஜினியை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து மாகாணத்தின் ஆளுநர் மார்ட்டின் ஓமாலி வழங்கிய அழைப்பு கடிதத்தை வழங்கினார். அதனை ரஜினி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

அக்கடிதத்தில் ஆளுநர் மார்ட்டின் ஓமாலி குறிப்பிட்டுள்ள வாழ்த்துரையில் இந்திய சினிமாவில் சுப்பர் ஸ்டாராக நீங்கள் நீண்ட காலம் வெற்றிகரமாக திகழ்வது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த துறையில் பல சாதனைகள் செய்து அளவில்லா புகழை அடைந்துள்ளீர்கள் என்பதில் மகிழ்ச்சி. உலகெங்கும் பரவி இருக்கும் உங்கள் பல கோடி இரசிகர்களின் ஆதரவை மேலும் வெற்றி பெற எங்கள் மேரிலான்ட் மாகாண அரசாங்கம் வாழ்த்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பின்போது ஹொலிவூட் மற்றும் இந்தி படங்களுக்கு நிகராக ரஜினியின் படங்கள் எப்படி அமெரிக்க மக்களால் பாராட்டப்படுகின்றன என்பதை ராஜன் நடராஜன் விளக்கினார்.

இதேவேளை அமெரிக்க வாழ் தமிழர்கள் குறித்து மிகுந்த அக்கறையுடன் ரஜினிடம் கேட்டறிந்ததோடு அமெரிக்க அரசியலில் இத்தனை உயரிய பதவியில் இருக்கும் முதல் இந்திய தமிழர் டாக்டர் ராஜன் என்பதை அறிந்து ரஜினி வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்தார்.


தொடர்ந்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த ராஜன் ரஜினியை அமெரிக்க அரசு விருந்தினராக வரவேற்பதை பாரிய கௌரவமாக கருதுகிறோம் என்றார். (அ-5)

## பேருந்துடன் புகையிரதம் மோதி விபத்து; 10 பேர் பலி

சீனாவில் பயணிகள் பேருந்தும் சரக்கு புகையிரதமும் மோதிக் கொண்டதில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் ஹெய்ஹே நகரத்தில் உள்ள புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இந்த விபத்து நடந்தது.

புகையிரதக் கண்காணிப்பாளர் சரியான நேரத்துக்கு அங்கு வந்து புகையிரதம் வரும் தகவலை வாகனங்களுக்கு எச்சரிக்காததால் இந்த விபத்து நிகழ்ந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-2)



தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் 2013 ஆம் ஆண்டு சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன.

இத்தொடரை பார்வையிடுவதற்காக வந்த மியன்மார் எதிர்க் கட்சித் தலைவர். ஆங் சான் சூகியை சிறப்பு ஒலிம்பிக் சங்க தலைவர் நா கியுங் வொன் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## அவுஸ்திரேலியாவில் காலநிலை சீர்கேடு

அவுஸ்திரேலியாவில் வீசிய கடும் சூறாவளி மற்றும் மழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பெரும்பாலான ஆறுகளில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டியுள்ளதுடன் வெள்ளம் ஊருக்குள் புகுந்துள்ளது.

மேலும் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்க 20 இற்கும் மேற்பட்ட உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயிப்பது எப்படி என்று யோசிப்பதை விட;
தோற்றது எப்படி என்று யோசித்துப் பார்.
நீ ஜெயித்து விடுவாய். -ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதலில் கூட்டமைப்புக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துங்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி சாராதவர்கள் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுங்கள் என வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் நோக்கம் இம்மியும் இல்லை.

கூட்டமைப்பை தனிக் கட்சியாக பதிவு செய்து விட்டால் கூட்டமைப்பில் அங்கம் வறும் ஏனைய கட்சி உறுப்பினர்களுக்கும் காத்திரமான இடம் கிடைத்துவிடும்.

இஃது தமது கட்சி என்று அதிகாரம் செலுத்துகின்ற தமிழரசுக் கட்சிக்காரர்களுக்கு அவ்வளவு நல்லதல்ல.

எனவே கூட்டமைப்பு என்று வெளியில் கூறிக் கொண்டாலும் தமிழரசுக் கட்சியை வளப்படுத்திக் கொள்வதிலேயே அந்தக் கட்சிக்காரர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதற்கு கூட்டமைப்புடன் இணைந்துள்ள இதர கட்சி சார்ந்தவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

கூட்டமைப்பை பதிவு செய்யாததன் உள்நோக்கம் என்ன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அண்மையில் கேள்வி எழுப்பியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டாலும் அல்லது தமிழரசுக் கட்சியின் கீழ் கூட்டமைப்பு இயங்கினாலும் அது பற்றி நாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை.

எம்மைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கக்கூடிய ஒரு கட்சி, தனக்குள் முரண்பட்டுக் கொள்ளுமாக இருந்தால் உலகம் காறி உமிழும்.

தமிழர்களின் இனப்பிரச்சினை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இல்லை. அங்கு ஒருவரை ஒருவர் கழுத்து கொள்கின்றனர் என்ற நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால ஆரோக்கியத்துக்குப் படுபாதகமாக அமையும்.

சிங்கள ஆட்சியாளர்களின் போக்கினால் அவர்களுடன் ஒற்றுமையாக இருக்க முடியாது என்று நாம் கூறுவதற்கு முன்னதாக,

நாங்கள் எங்களோடு ஒற்றுமையாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

எங்களுக்குள் முரண்படுகின்றபோது அது உள்வீட்டு வண்டவாளங்களை தண்டவாளங்களில் ஏற்றிவிடும்.

அதன்பின்பு இனப்பிரச்சினையைவிட உள்வீட்டுப் பிரச்சினையே பெரிதாகிப்போகும்.

ஆகையால் ,ஆசாடபூதிகளாக இருக்காமல் தமிழ்ப்பற்றோடும்,தமிழ் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற விசுவாசத்தோடு –உள்ளன்போடு அரசியலை முன்னெடுங்கள். அப்போது தான் எங்கள் இலக்கை அடையமுடியும்.

# இப்படியும் நடக்கிறது ஏமாற்று நாடகம்

சலவைத்தூள் வாங்கிவிட்டு 4 ஆயிரத்து 750 ரூபா பணத்தை மோசடி செய்த சம்பவம் ஒன்று நல்லூர் கோவில் வீதியில் உள்ள கடையொன்றில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினம் அவ்வீதியில் உள்ள கடைக்கு மோட்டார்சைக்கிளில் வந்த வாட்டசாட்டமான இளைஞர்கள் 1/2 கிலோகிராம் நிறையுடைய சலவைத் தூளை (சேவ்எக்சல்) வாங்கியுள்ளனர்.

வாங்கியவுடன் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளை கடை உரிமையாளரிடம் கொடுத்தனர். கடைக்காரரும் மிகுதிப் பணமான 4 ஆயிரத்து 750 ரூபாவை கொடுத்துள்ளார். அப்பணத்தைப் பெற்றுக்கொண்ட இளைஞன் தம்மிடம் 250 ரூபா பணம் இருப்பதாகக் கூறி நாணயத்தாளாக கொடுத்த 5 ஆயிரம் ரூபாயைத் திரும்பத் தரும்படி கேட்டுள்ளார்.

கடைக்காரன் 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை கொடுத்தவுடன் மிகுதிப்பணமாக கொடுக்கப்பட்ட 4 ஆயிரத்து 750 ரூபாவையும் மீண்டும் கொடுக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளையும் சலவைத்தூள் பையையும் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். (அ)

# உடலுக்குள் மறைத்து தங்கக்கட்டிகள் கடத்தல்

## நபருக்கு ஒரு இலட்சம் அபராதம்

உடலுக்குள் ஒருதொகை தங்கத்தை மறைத்துவைத்து இந்தியாவிற்கு கொண்டு செல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தநபர் ஆறு தங்கக் கட்டிகளை தனது உடலுக்குள் மறைத்து எடுத்துச்செல்ல முயற்சித்ததாக சுங்கப்பிரிவு பேச்சாளர் ஜி.ஏ.லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

அந்த நபரின் நடவடிக்கைகள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து உதவிச் சுங்க உத்தியோகத்தர் ஒருவர் அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது தங்கக் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட தங்கம் 36 இலட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக சுங்கப் பிரிவு பேச்சாளர் மேலும் கூறினார். (அ-2)

### தேசவழமைச் சட்டம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேசவழமைச் சட்ட நடைமுறைகளும் சமூகம் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் என்னும் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.90, பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள மனிதநேய கூட்டமைப்பு கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடபிரதேசத்தின் தனித்துவத் தன்மையாக விளங்கும் தேசவழமைச்சட்டம் குறித்து சட்டத்தரணி ஏ.எஸ்.அற்புதராஜ் கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

இக்கலந்துரையாடல் கருத்தரங்கில் சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள், இவ்விடயத்தில் அக்கறையுடையோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (அ-5)

### சுயதொழில் அறிவூட்டல் கருத்தரங்கு 31 ஆம் திகதி

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி விதாதா [illegible]லைய சுயதொழில் அறிவூட்டல் கருத்தரங்கு நாளை 31ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுயதொழில் ஆர்வமுள்ளவர்களும் சுயதொழில் மேற்கொள்பவர்களும் கலந்துகொள்ளமுடியும்.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக பண்ணாகம் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-30)

# தேரர் மீது தாக்குதல்

திவ்வியக அதிகரன சைலபிம்பா விகாராதிபதி யட்டியலகல உடதிஸ்ஸ தேரர் மீது நேற்று அதிகாலை இனம்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த தேரர் தற்போது பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் தேரரின் இரு கைகளிலும் தலையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் பொலநறுவை கமநலசேவை மாவட்ட அலுவலகத்தில் அபிவிருத்தி உதவி அதிகாரி ஒருவர் புலதிசிபுர பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-11)

# மகாத்மா காந்தியின் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தி அடிகளாரின் 65-வது ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிப்பும், அஞ்சலிக் கூட்டமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலையடியில் அகில இலங்கை காந்திசேவா சங்க யாழ்.மாவட்ட கிளைத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு 774, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க கிளை அலுவலகத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் கலந்து கொள்கிறார்.

இங்கு தியாகி அறக்கொடை இல்ல மாணவி செல்வி ரகுமாரன் கோபிகா, யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந.சிவகரன் ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன. (எ-5)

# பூச்சிகளைப் பிடித்த குற்றச்சாட்டில் ஹங்கேரி பிரஜைக்கு அபராதம்

சிகிரியா பிரதேசத்தில் பட்டாம்பூச்சிகள் மற்றும் தட்டாம்பூச்சிகளை பிடித்த குற்றச்சாட்டில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த இருவரை வனவள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சீகிரியாவில் உள்ள இயற்கை சரணாலயமான ராமமலை பிரதேசத்திலே அவர்கள் பட்டாம்பூச்சிகளைப்பிடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சீகிரிய வனவள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே இவ்விரு ஹங்கேரி பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர். குறித்த பிரஜைகளிடமிருந்து பூச்சிகளைப் பிடிக்கப் பயன்படுத்தும் உபகரணங்களையும் வனவள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் தம்புள்ள நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இருவருக்கும் தலா 65 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிராமி விலங்குகள் குறித்து ஆய்வு செய்து புத்தகம் ஒன்றை எழுதவே இவற்றைப்பிடித்ததாக ஹங்கேரிய பிரஜைகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (அ-2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### எல்லாம் இதய மயம்

சுருக்கமாகச் சொன்னால் நான் என்ற எண்ணமே எல்லாவற்றிற்கும் மூலம். அது உதிக்குமிடம் இதயம்.

இந்த இதயம் இரத்த சுத்திகரிப்புச் செய்யும் அங்கம் அன்று. ஹிருதயம் என்பதற்கு இதுவேமையம் என்பது பொருள். ஆகவே அது ஆன்மாவைக் குறிக்கிறது

பிரபஞ்சம் முழுவதும் உடலில் அடங்குகிறது. எனவே பிரபஞ்சமே இதயத்தில் அடக்கம்.

உலகத்திற்கு சூரியனைப்போன்று உடலுக்கு இதயம். சூரியன், சந்திரனுக்கு ஒளிதருவது போல இதயம் மனதிற்கு ஒளி தருகிறது.

சூரிய அஸ்தமனத்தின் போது சந்திர ஒளியை மட்டும் காண்பதைப்போன்று இதயத்திலிருந்து விலகி நிற்கும்போது மனதை மட்டும் காணமுடிகிறது.

பிரக்ஞானம் என்ற சொல்லுக்கு வெளிப்படையான பொருள் மனம் என்றாலும் அது இதயத்தையே குறிக்கிறது என அறிஞர் உணர்வர். பரம்பொருள் இதயமே.

மயக்கம், அதிகமான மகிழ்ச்சி அல்லது துக்கம், பயம் போன்றவற்றால் எண்ணங்கள் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பெறும் போது மனம் தனது மூலமாகிய இதயத்திற்குச் செல்கிறது. அத்தகைய கலப்பை நாம் உணர்வதில்லை. இருப்பினும் உணர்வோடு இருதயத்தில் நுழையும்போது அது சமாதி என்று அழைக்கப்பெறும். இவ்வாறு வேறுபாடு வார்த்தைகளில் மட்டுமே.

இதயக்குகையின் நடுவே பிரம்மம் மட்டுமே ஒளிர்கிறது. நான்– நான் என்ற நேரிடையான ஆன்ம அனுபவமே இது. ஆத்ம விசாரத்தின் மூலமோ அல்லது கலப்பினாலோ அல்லது மூச்சடக்கத்தினாலோ இதயத்தில் நுழைந்து அதாகவே வேரூன்றி இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் அணியின் திறமைகளுக்கு குறைவில்லை

## பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூரிய



இலங்கைக் கிரிக்கெட் அணியில் திறமைகளுக்குக் குறைவில்லை என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் இலங்கையின் பிரதம தேர்வாளராக நியமிக்கப்பட்ட வருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார். திறமைகளை இனங்கண்டு சரியான முறையில் தயார்படுத்துவதே தற்போதைய தேவையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இளைய வீரர்கள் பலர் இலங்கையில் திறமையோடு காணப்படுகின்றமை குறித்து ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்வதாகத் தெரிவித்த சனத் ஜெயசூரிய, அவர்கள் தங்கள் திறமைகளையும் வெளிப்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

இளம் வீரர்கள் தங்கள் திறமைகளின் மூலம் தங்களுக்கு முன்னர் காணப்பட்ட சிரேஷ்ட வீரர்களின் இடங்களைத் தங்களால் நிரப்ப முடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இளம் வீரர்கள் தங்கள் திறமைகளின் மூலம் நாட்டினைப் பெருமைப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட சனத் ஜெயசூரிய, இலங்கையில் திறமைகளுக்குக் குறைவில்லை எனவும், அவற்றைச் சரியான முறையில் தயார்படுத்துவதே தேவையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

சனத் ஜெயசூரிய இலங்கையின் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகக் காணப்படுவதால் அவரது நியமனம் அரசியல் சம்பந்தப்பட்டது என்ற கருத்துக்களை நிராகரித்த சனத் ஜெயசூரிய, இரண்டு தசாப்தங்களுக்கு மேல் இலங்கைக்காகப் போட்டிகளில் பங்குபற்றியுள்ள நிலையில், தேர்வாளராகப் பதவி வகிக்கும் தகுதி தனக்குள்ளதாகத் தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்மோகனுடன் ஓடவேண்டும்

## - 101 வயது ஓட்ட வீரரின் விருப்பம் இது



பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஓட வேண்டும் என்று 101 வயது நிரம்பிய மரதன் ஓட்டப் பந்தய வீரர் ஃபௌஜா சிங் விருப்பம் தெரிவித்துள்ளார்.


பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஃபௌஜா சிங்குக்கு திங்கள் கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

விழாவில் அவர் மேலும் கூறியதாவது: 80 வயது நிரம்பிய பிரதமருடன் ஓட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். சாதாரண மனிதனான எனக்கு, இங்கிலாந்து இளவரசி எலிசபெத் தேநீர் விருந்து அளித்தது பெருமையாக உள்ளது.

கடவுள் மீது நம்பிக்கையுள்ள நான், ஓடுவது மட்டுமில்லாமல், சீக்கிய கலாச்சாரத்தைப் பரப்புவதை இலட்சியமாகக் கொண்டுள்ளேன். என்னுடைய உறுதியே என்னை பல மைல் தொலைவு ஓட வைக்கிறது.

கடவுள் அருளால் உலகின் பல நாடுகளில் மரதன் போட்டிகளில் நான் பங்கேற்றுள்ளேன். நடப்பதும், ஓடுவதும்தான் எனது ஆரோக்கியத்துக்கு உறுதுணையாக உள்ளது. எந்தவிதமான மருந்து, மாத்திரைகளையும் எடுத்துக் கொள்வதில்லை வேகவைத்த உணவுகளை உண்பதில்லை என்றார்.

# ரஞ்சிக் கிண்ணம் 40 ஆவது தடவை மும்பை வசம்



ரஞ்சிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 40 ஆவது முறையாக கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. இறுதிப் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் சவுராஷ்டிரா அணியுடன் மும்பை இந்தியன்ஸ் மோதியது.

# சதம் அடிக்கத் தயாராகின்றார் கிரீம் ஸ்மித்

தென்னாபிரிக்க அணி தலைவர் கிரீம் ஸ்மித், 100 ஆவது முறையாக டெஸ்ட் போட்டிக்கு தலைமை வகித்து புதிய சாதனை படைக்க உள்ளார். வாண்டரர்ஸ் மைதானத்தில் வெள்ளியன்று பாகிஸ்தானுடன் ஆரம்பமாகவுள்ள முதல் டெஸ்ட் போட்டி, தென்னாபிரிக்க அணியின் தலைவர் களமிறங்கும் 99ஆவது டெஸ்ட் போட்டியாகும். ஏற்கனவே அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த ஒரு டெஸ்டில் உலக லெவன் அணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

இதனால், 100 டெஸ்ட் போட்டிகளில் தலைவராக இருந்த முதல் வீரர் என்ற பெருமை கிரீம் ஸ்மித்துக்கு கிடைக்கிறது. இந்த பட்டியலில், அவுஸ்திரேலியாவின் ஆலன் பார்டர் (93 டெஸ்ட்) 2ஆவது இடத்திலும், நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளெமிங் (80)3ஆவது இடத்திலும் உள்ளனர்.



## சச்சினின் முன்மாதிரி

ரஞ்சி கிண்ணத்தை 40ஆவது முறையாக வென்று சாதனை படைத்துள்ள மும்பை அணிக்கு, மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் ரூ.3 கோடி மற்றும் கிரிக்கெட் சபை சார்பில் ரூ.2 கோடி என மொத்தம் ரூ.5 கோடி வழங்கப்பட்டது.

'மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பரிசுத் தொகையை அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். மூத்த வீரர்கள் தங்கள் பங்கையும் அவர்களுக்கு விட்டுத்தர முன்வர வேண்டும் என்று சச்சின் கூறியுள்ளார்.

## ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி

நெதர்லாந்தின் விக் ஆன் ஸீ நகரில் நடைபெற்ற 75ஆவது டாடா ஸ்டீல் சர்வதேச சதுரங்க போட்டியின் இறுதிச் சுற்றில் ஆனந்த் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இந்த ஆட்டத்தில் சீனாவின் வாங் ஹாவிடம் ஆனந்த் வீழ்ந்தார். ஆனந்துடன், 8 புள்ளிகள் பெற்ற ரஷ்யாவின் செர்ஜி கர்ஜாகின் 3ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டார். இந்த ஆட்டத்தில் 3ஆவது இடத்தைப் பெற்ற ஆனந்த், 7 புள்ளிகள் பெற்று சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 6ஆவது இடத்தில் உள்ளார்.


இப்போட்டியில், 10 புள்ளிகளைப் பெற்ற நோர்வேயின் மாக்னஸ் கார்லென்ஸ சம்பியன் பட்டத்தை வென்றார். அவர், தனது கடைசிச் சுற்றில் நெதர்லாந்தின் அனீஷ் கிரியுடன் சமன் செய்தார். இவரைத் தொடர்ந்து 8.5 புள்ளிகள் பெற்ற ஆர்மீனியாவின் லேவன் அரோனியன் 2 ஆவது இடத்தைப் பிடித்தார். இந்தியாவின் மற்றொரு வீரரான ஹரிகிருஷ்ணன் 6.5 புள்ளிகளுடன் 7ஆம் இடத்தைப் பிடித்தார்.

## மும்பை இந்தியன்ஸ்க்கு புதிய பயிற்சியாளர்

மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக நியூசிலாந்தை சேர்ந்த முன்னாள் வீரர் ஜான் ரைட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2000 முதல் 2005 ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் பயிற்சியாளராகவும் இருந்திருக்கிறார்.

முந்தைய பயிற்சியாளர் ரொபின் சிங்கும் தொடர்ந்து தனது சேவையை மும்பை அணிக்கு அளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தரப் பட்டியலில் ரெய்னா திடீர் பாய்ச்சல்



சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி.,) டுபாயில் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிரண்டு இடங்களை தென்னாபிரிக்காவின் ஹாசிம் ஆம்லா, டிவிலியர்ஸ் தக்கவைத்துக் கொண்டனர். இந்தியாவின் சுரேஷ் ரெய்னா 15 இடங்கள் முன்னேறி, 10ஆவது இடம் பிடித்தார்.

இதன்மூலம் முதன்முறையாக "டாப்-10" வரிசையில் இடம் பிடித்தார். சமீபத்தில் முடிந்த ஒருநாள் தொடரில் அசத்திய இவர், 5 போட்டியில் 4 அரைசதம் உட்பட 277 ஓட்டங்கள் எடுத்து அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். இதனால் தொடர் நாயகன் விருதை முதன் முறையாக கைப்பற்றினார்.

மற்ற இந்திய வீரர்களான வீராட் கோஹ்லி (3ஆவது இடம்), அணித்தலைவர் டோனி (4ஆவது இடம்) "டாப்-10" பட்டியலில் நீடிக்கின்றனர்.

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தானின் சயீட் அஜ்மல், முகமது ஹபீஸ் முதலிரண்டு இடங்களில் நீடிக்கின்றனர். தென்னாபிரிக்காவின் டிசாட்சொபே 3ஆவது இடத்தில உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற பின், பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட செர்பியாவின் நோவக் ஜோகோவிச்.


ஓசாசுனா அணிக்கு எதிரான ஸ்பானிஷ் லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வென்றது. வெற்றி மகிழ்ச்சியில் பார்சிலோனாவின் மெஸ்சி

# இலங்கையை காப்பாற்ற...

இலங்கை அரசே விசாரணை நடத்தி தவறு செய்த இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அத்தகைய நடவடிக்கை எதையும் எடுக்காத அரசு, ஒருபுறம் போர்க் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகளை வழங்கி வருகின்றது.

மற்றொருபுறம் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள தமிழர்களை அச்சுறுத்தி ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

இதற்காக இலங்கை அரசு மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனிதவுரிமை ஆணையக் கூட்டத்தில் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று உலகெங்கும் உள்ள தமிழர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆனால் தமிழர்களுக்கு துரோகம் செய்யும் வகையில் இலங்கை அரசைக் காப்பாற்ற இந்தியாவும், அமெரிக்காவும் திட்டமிடிருப்பதாக அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈழத்தமிழர் நலனை விட இலங்கையில் உள்ள இயற்கை வளங்கள் மீதும் அந்நாட்டு கடற்பரப்பு மீதும் அதிகமாக பாசம் வைத்துள்ள அமெரிக்கா போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கையை காப்பாற்றும் நோக்குடன் அந்நாட்டிற்கு எதிராக இந்தியாவின்ஆதவுடன் ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் மென்மையான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர திட்டமிட்டிருக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களை கண்டிக்கும் வகையில் இத்தீர்மானம் வடிமைக்கப்படும் போதிலும் அதில்போர்க்குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணையை நடத்த இலங்கை அரசுக்கு மேலும் சில ஆண்டுகள் அவகாசம் கொடுக்க வேண்டும் என்ற வாசகம் இடம்பெற்றிருக்கும் என்றும் இதன்மூலம் இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை நீர்த்து போகச் செய்வதுதான் இந்தியா மற்றும் அமெரிக்காவின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

அண்மையில் டில்லிவந்த இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் பீரிஸிடம் போர்குற்றச் சாட்டுகளில் இருந்து இலங்கையை காப்பாற்றுவதாக இந்திய அரசுத்தரப்பில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கைக்கு எத்தனையோ வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டும் அது திருந்துவதற்கோ அல்லது வருந்துவதற்கோ அறிகுறிகள் தென்படவில்லை.

எனவே இனியும் அந்நாட்டிற்கு அவகாசம் தரப்படாமல் பெப்ரவரி-மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் இலங்கை அரசு மீது உடனடியாக போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியாவே கொண்டுவருவது தான் சரியானதாக இருக்கும்.

இதைச் செய்யும் படி இந்திய அரசை வலியுறுத்தி நாளை மறுதினம் முதலாம் திகதி கூடும் தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ-1)

# அவுஸ்.குழுவினரை...

இராணுவத்தினரதும், புலனாய்வாளர்களினதும் மிகுந்த அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் மன உணர்வுகளை அவுஸ்திரேலிய நாட்டின் பிரதான எதிர்க் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

காட்டுப் பகுதியில் குடியேற்றம் செய்யப்பட்டு 4 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு விடுவதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் மக்கள் தொழில், அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்கின்றனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பிரதேசத்திற்குச் சென்ற மேற்படி அவுஸ்திரேலிய குழு அங்குள்ள நிலைமைகளை சுமார் 20 நிமிடங்களில் நேரடியாக அவதானித்திருப்பதுடன், மக்களுடைய பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது இராணுவத்தினரதும், புலனாய்வாளர்களதும் அதிகரித்த நடமாட்டத்தினால் மக்கள் அவர்களுடன் நெருங்கிப் பேசுவதற்கு அச்சப்பட்டனர். எனினும் அத்தனை நெருக்குவாரங்களையும், அச்சுறுத்தலையும் தாண்டி ஒரு சில மக்கள் தங்கள் பிரச்சினைகளைக் கூறினர்.

குறிப்பாக தொழில்வாய்ப்பு, கல்வி மற்றும் குடிநீர் போன்றவற்றுக்கு தட்டுப்பாடும், நிறைவற்ற தன்மையும் காணப்படுவதாகக் கூறிய மக்கள், இந்த நிலைமை சொந்த ஊர்களில் ஒருபோதும் இருந்ததில்லை எனவும் கூறியிருக்கின்றனர்.

இதேபோல் மீள்குடியேற்றத்திற்கென அழைத்துவரப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படாதபோதும் எங்களுடைய வீடுகளைப் பார்வையிடவும், கைவிட்டுவந்த கால்நடைகளை மீட்கவும் படையினர் இதுவரையில் அனுமதிக்கவில்லை.

எனவே எங்கிருந்தாலும், சொந்த மண்ணில் வாழ்வதுபோல் வராது. எங்களை எங்கள் சொந்த மண்ணுக்கு கொண்டு சென்றுவிட அனுமதி பெற்றுத் தாருங்கள் என மக்கள் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் குறித்த மக்களுடைய பிரச்சினைகள் குறித்து தாம் உணர்ந்து கொள்வதாகவும் அதற்கான முனைப்புக்களை தாம் சிந்திப்பதாகவும் குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடமும் கூறியுள்ளனர். (எ-11)

# மனித உரி...

என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவும் இணைந்து, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு 15 மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளன.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களது நலனைக் கருத்திற் கொண்டு இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிராந்திய இணைப்பு அதிகாரிகள் மக்களை சிக்கலின்றி சந்திப்பதற்கு மோட்டார் சைக்கிள் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# குளத்தினுள்...

காலை 11.00 மணியளவில் குறித்த குளத்திற்கு சென்று தூண்டில் போட்டு மீன்பிடித்து விளையாடப்போவதாக தனது பெற்றோர்களிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

ஒருமணி நேரத்திற்கு மேலாகியும் சிறுவன் வீடு திரும்பாததை அடுத்து சிறுவனைத் தேடி பெற்றோர் குளம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்றனர்.

அங்கு குளத்தில் சிறுவன் சடலமாக கிடப்பதனைக்கண்டு கூக்குரலிட்டதுடன்; பின்னர் அயலவர்களின் உதவியுடன் சடலம் மீட்கப் பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (எ-4)

# 15 வயது சிறு...

பட்டுள்ளார். அருள்நேசன் ஆருணியா என்ற சிறுமியே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (எ-11)

# பாறையில்...

அப்படகில் இருந்த 20 பேர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அக்குழுவிலிருந்த ஒருவர் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. படகு விபத்திலிருந்து மீட்கப்பட்ட அனைவரும் யாவாவின் சிலகெப் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகின் எஞ்சின் உடைந்ததாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் 25 இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் இந்தப் படகில் பயணித்துள்ளதாகவும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-1)


# மூலிகை மருத்துவத்தில் சாதனை



தெய்வீக மூலிகை மருந்துகளால் ஆண்மைக்குறைவு, குழந்தையின்மை, மூலம், சொரியாசிஸ், சிறுநீரகப்பிரச்சனை, கேன்சர், மஞ்சள்காமாலை(B), பால்வினை நோய், எடைகூட /குறைய முழுமையாக குணமாகும் அதிசயம்

இந்தியாவிலேயே No.01 வைத்தியசாலையாகச் செயல்ப்படும் எங்களது வைத்தியசாலையில் அரசு பதிவுபெற்ற 17 சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் பணிபுரிந்து எளிதில் குணப்படுத்த முடியாது என்று கூறப்படுகின்ற நோய்களையெல்லாம் முழுமையாக குணமடையச்செய்து சாதனை புரிந்து வருகின்றார்கள். நீங்களும் பயன்பெற உடனே தொடர்பு கொள்ளவும். வைத்தியர்களை நேரில் தொடர்பு கொள்ளமுடியாதவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்ற பின் மருந்துகளை தபாலில் பெற்றுக்கொள்ளலாம். எங்களது மருந்துக்கள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பித்தரப்படுகின்றன. எங்களது ஆயுர்வேத மருந்துகள் அனைத்தும் பக்கவிளைவுகள் அற்றது.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

செல்: 0091 9842457673

இலங்கைச் செல்: 0754154364

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

E-mail: sridevisiddha@gmail.com


# ஊடக அடக்குமுறைக்கு...

எதிர்ப்புக் கூட்டத்தையும் நடத்தினர்.

ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக அணி திரள்வோம் எனும் தொனிப்பொருளிலான இந்த ஆர்ப்பாட்டப் பேரணியினை ஊடக அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு ஏற்பாடு செய்திருந்தது. கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, சுகிர்தரன், சிவராம், நிமல்ராஜ், காணாமல் போன பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் இதன்போது நினைவு கூரப்பட்டனர்.

பிரகீத் என்னெலியகொடவை கடத்தியவர் எங்கே? போத்தல ஜயந்த, குகநாதன் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் ஏன் இதுவரை கைது செய்யப்படவில்லை? லசந்த விக்கிரமதுங்க, சுகிர்தன், சிவராம் மற்றும் நிமல்ராஜ் ஆகியோரை கொலை செய்தவர்கள் எங்கே? போன்ற பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பி தங்களுடைய எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அத்துடன் இன்னும் சிலர் கறுப்புத் துணியினால் தங்களுடைய வாயை கட்டிக்கொண்டதுடன் இன்னும் சிலர் கறுப்புத் துணியை தலையில் கட்டி தங்களுடைய எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, விஜித ஹேரத், திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்டோரும் சட்டத்தரணிகள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் ஒன்றியம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் தெற்காசிய ஊடக அமைப்பின் இலங்கைக் கிளை ஆகிய அமைப்புக்கள் இந்த ஊடக அமைப்புக்களின் ஒருங்கிணைப்பில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பொருட்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களிற்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்குத்தங்களாலானஉதவிகளைபொருளாகவோ, பணமாகவோ வழங்கி உதவுமாறு கலைப் பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று யாழ். நகர வர்த்தகர்களிடம் பொருட்கள் சேகரிக்கப்படவுள்ளன.(எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம்(வேவி) பசுபதி



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், மல்லாவி, வவுனியாவை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் (வேவி) பசுபதி நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், பசுபதியின் பாசமிகு மனைவியும், சுந்தரலிங்கம்(மகாரம்பைக்குளம்), தர்மலிங்கம் (முகத்தான்குளம்), பாக்கியம்(நெடுந்தீவு), சிவசுப்பிரமணியம் (செட்டிக்குளம்) ஆகியோரின் அருமைத் தங்கையும், வசந்தகுமாரி (யா/ இந்து மகளிர் கல்லூரி), விஜயகுமாரி.(லண்டன்),பங்கஜகுமாரி (வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தி), உதயகுமாரி(பிரதிக் கல்விப் பணிப்பாளர்-வவுனியா வடக்கு), மனோகரன் (கொலண்ட்), சற்குணதேவி ( லண்டன்), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரபாலன் (கரைச்சி பிரதேச சபை),கிருபாகரன்(லண்டன்),சசிகுமார்(அதிபர்-சேமமடு ஷண்முகானந்தா மகா வித்தியாலயம்), விவேகானந்தராசா (வவுனியா), கௌதமி (கொலண்ட்) கருணாதனன்(லண்டன்),லிமனகலா(லண்டன்) ஆகியோரின் அருமை மாமியும், பிறையாளன், அருண்யா, பிரியந்தினி, கீர்த்தனன், அபிஷனா, அஸ்வின், திவியுகன், அர்ச்சிகன், அதியுகன், அபியுதா, மிசான், அபிஷாலினி,அக்ஷயா, அர்ச்சகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இலண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பசுபதி-00447438587038
வசந்தகுமாரி -0779641750
உதயகுமாரி-0774400015
பங்கஜகுமாரி- 0776015481

தகவல்:
குடும்பத்தினர்

(1611)

## இளம் குடும்பப் பெண் சட...

புரத்தினை சொந்த இடமாகக் கொண்ட வரும் 9 மாத பெண்குழந்தை யொன்றின் தாயாருமான கமலதீபன் கயல்விழி (வயது-23) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இப்பெண் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின்னரே கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என பொலிஸ்தரப்பு சந்தேகம் தெரிவித்துள்ளது.

இக்கொலையின் சூத்திரதாரி என்ற சந்தேகத்தின் பேரில் அப்பெண்ணின் கணவரான கவுரிப்பிள்ளை கமலதீபன் (வயது 27) என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு உள்ளார். கொலை எனக்கருதப்படும் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணையில் உறவினர்கள் தெரிவித்துள்ளதாவது,

காதல் திருமணம் செய்துகொண்ட குறித்த தம்பதியருக்கிடையில் நாள்தோறும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவும் இவ்வாறு முரண்பாடு இடம்பெற்று இறுதியில் நள்ளிரவு வேளை பெரும் அலறல் சத்தத்துடன் கிணற்றில் வீழ்ந்த சத்தம் கேட்டது. எனினும் நாம் அவ்வேளை அங்கு செல்லவில்லை. அதிகாலை வேளை சென்ற போது குறித்த கிணற்றுக்குள் சடலம் கிடப்பதனை நாம் கண்டோம்.

குறித்த பெண்ணின் கணவர் காலை வேளை அங்கு காணப்படவில்லை. பெண்ணின் 9 மாத குழந்தையே குடிசையில் கட்டப்பட்டு இருந்த ஏணைக்குள் கதறிக் கொண்டும் இருந்தது.

பின்னர் முற்பகல் 9.30 மணியளவில் உயிரிழந்த பெண்ணின் கணவர் அப்பகுதியிலுள்ள வேறொரு வீடொன்றில் ஒளித்திருக்கும் போது பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றனர்.

சம்பவ இடத்திற்கு பிற்பகல் 1.30 மணியளவில் சென்ற யாழ்.நீதிமன்ற பதில் நீதவான் திருநாவுக்கரசு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் பெண்ணின் கணவரை விசாரணைக்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-4)


Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்


(C-2281)

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த பத்து ஆண்டுகளாக
யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற
பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை
தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும்
சேவையாற்றி கடந்த 25.01.2013 இல் கொழும்பில் இடம்பெற்ற
இலங்கை தனியார் பஸ் உரிமை யாளர் சங்கத்தின்
பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தேர்வில் அச்சங்கத்தின்
உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள

**திரு.பொன்னுத்துரை கெங்காதரன்**

அவர்களின் சேவை மென்மேலும் பல உயர்வுகள்
பெற்று சிறக்க
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best wishes

நிர்வாகத்தினர், பணியாளர்கள்,
யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற
பஸ் கம்பனிகளின் இணையம்

Valampurii Graphics

(1607)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.